விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 11.03.2021 வியாழக்கிழமை | இதழ் : 101 | பக்கங்கள் : 16



05

இழுத்துச் செல்லப் பட்டார் ரஞ்சன் ராமநாயக்க



09

புலனாய்வு எச்சரிக்கை கவனிக்கப்பட்டது ஏன்?



11

பெண்களை இழிவாக நடத்தும் ஊடகங்கள்



14

பொதுபல சேனா இன்று சத்தியாகிரகம்

# வடக்கில் தீவிரமாகும் கொரோனா தொற்று!

## சிவராத்திரி வழிபாடுகளில் பங்கேற்போர் அவதானம்



யாழ்ப்பாணம், மார்ச் 11

வருடாந்த சிவராத்திரி நாள் வழிபாடுகள் இன்று நடைபெறவுள்ளன. ஆனால் கடந்த வாரத்திலிருந்து யாழ்.மாவட்டத்தில் கொவிட் - 19 பரவல் தீவிரமடைந்து வருகின்றது. அதனால் பக்தர்கள் மற்றும் பொது மக்களை அவதானமாக நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள் கின்றோம் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

02

## உள்ளக விசாரணைப் பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்பது நிரூபணம்!

### அதனால் தான் கிறிஸ்வதர்களும் இன்று சர்வதேச விசாரணையைக் கோருகின்றனர்!!

### பாராளுமன்றில் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, மார்ச் 11

“இறுதி யுத்தத்தில் எமது மக்களுக்கு எதிராக நிகழ்த்தப் பட்ட இன அழிப்புக்கு நியா யத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும், பொறுப்புக்கூறலை நிறைவேற்றவேண்டும் என 11 ஆண்டுகளாக நாம் வலியுறுத்திக் கொண்டுள்ளோம். அதனையே 2 ஆண்டுகளில் கிறிஸ்தவ சமூ கம் இன்று கேட்கும் நிலைமை உருவாகியுள்ளது.

எனவே உள்ளக விசார ணைப் பொறிமுறையில் நம் பிக்கை இல்லை என்பது இன்று நிரூபணமாகிவிட்டது. பொறுப் புக்கூறலை நிறைவேற்றுவதில் நாடு தோற்றுவிட்டது.”

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் சபையில் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு

02

## அம்பாள்குளத்தில் மீட்கப்பட்ட பெண்ணின் மரணம் கொலை!

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி அம்பாள் குளத் தில் நேற்று முன் தினம் சடல மாக மீட்கப்பட்ட பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என உடல்கூற்று பரிசோ தனை முடிவுகள் தெரி வித்துள்ளன.

02

## யாழ்ப்பாணத்தில் மேலும் 20 பேருக்கு தொற்று உறுதி!

### யாழ். பஸ் டிப்போவில் இருவர் காரைநகர் டிப்போவில் இருவர்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு மாகாணத்தில் மேலும் 27 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று புதன் கிழமை கண்டறியப்பட்டுள் ளது.

அவர்களில் 20 பேர் யாழ். மாவட்டத்திலும் ஒருவர் கிளிநொச்சி மாவட்டத் திலும் 6 பேர் வவுனியா

02

## வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே போராடினேன்!

### கொரோனா தொற்று குறித்து மனம் திறந்த சுகாதார அமைச்சர்



கொழும்பு, மார்ச் 11

கொரோனா தொற்று சிகிச்சையின்போது தாம் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராடிய தாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 23ஆம் திகதி கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டு அமைச்சர்

02

## நிபந்தனைகளின்றியே ஆயிரம் ரூபா வேண்டும்

### தொழிலாளர்கள் திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 11

பெருந்தோட்டத் தொழிலா ளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங் கப்பட வேண்டும் என வலி யுறுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ள நிலையில், அதற்கு பெருந் தோட்டத் தொழிலா ளர்கள் பெரும் வர

02

## ஓ.எல். பரீட்சை பெறுபேறு ஜூன் மாதம் வெளியாகும்

### உயர்தர வகுப்புகள் ஜூலையில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 11

நடந்து முடிந்த 2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதா ரண தரப் பரீட்சை பெறுபேறு களை ஜூன் மாதத்தில் வெளி யிட்டு உயர்தர வகுப்புகளை ஜூலையில் ஆரம்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

02

## புர்காவுக்கு தடை!



கொழும்பு, மார்ச் 11

நாட்டின் தேசிய பாது காப்பை உறுதி செய்யும் நோக்கில் முஸ்லிம் பெண்கள் அணியும் புர்கா ஆடையை தடை செய்யவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச் சர் அட்மிரல் சரத் வீர சேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து 37 பேர் ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் இணைந்தனர் எனக் குறிப்பிட்ட அமைச்சர், ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட 54 பேர் வெளிநாடுகளில் இருந்த நிலையில் அவர்களில் 50 பேர் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட் டிருக்கின்றனர் எனவும் கூறினார்.

நேற்று பாராளுமன்றத்தில் விசேட உரை யொன்றை ஆற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர மேலும் தெரிவிக்கையில்-

02

## உள்ளக....

வின் அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சி கொண்டுவந்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மிக மோசமான தற்கொலைத் தாக்குதல் இடம் பெற்றது. இதில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியை பெற்றுக்கொடுக்கவும், குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்கும் கடப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது. ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் நீதியை வழங்குவதில் தோல்வியடைந்துள்ளது என்றே கூற வேண்டும்.

இந்த தாக்குதலுக்கு பிரதான சூத்திரதாரி யார் என பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கேள்வி எழுப்புகின்றார். ஆனால் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சஹ்ரானே பிரதான சூத்திரதாரி என சபையில் கூறிகின்றார்.

அவ்வாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பிரதான சூத்திரதாரி யார் என்பது தெரிவிக்கப்படவில்லை. முதலில் பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையை வாசிக்க வேண்டும். குற்றவாளிகளை கண்டறியும் வழிமுறையை பாராளுமன்ற தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழு அறிக்கையின் பல விடயங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்த தாக்குதலை யார் திட்டமிட்டது, யார் பின்னால் இருந்து இயங்கியது, யாருடைய நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்பதே கண்டறியப்படவேண்டும். பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையிலும், ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் விசாரிக்கப்பட்டும் இப்போது வரையில் பிரதான சூத்திரதாரி யார் என்பது தெரியாது என அரசாங்கம் கூறுகின்றது என்றால், இதன் பின்னணியில் ஏதோ தவறு இடம்பெறுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கவேண்டும். அதுவே பொறுப்பான அரசாங்கத்தின் கடமையாகும். எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் குற்றவாளிகளை கண்டறியவேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உள்ளது.

இந்த நாட்டில் எமக்கு எதிராக இடம்பெற்ற இன அழிப்பில் நியாயத்தை கேட்டு நிற்கின்ற வேளையில், சர்வதேச விசாரணையை நடத்தக்கோரி நிற்கின்ற நிலையில், சர்வதேச விசாரணை அவசியமில்லை, உள்ளக விசாரணைகளில் தீர்வு காண்போம் என கூறியவர்கள் இப்போது இந்த விடயத்தில் சர்வதேச விசாரணை வேண்டும் என கேட்கின்றனர்.

ஏன் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது? ஏனென்றால் பொறுப்புக்கூறலை நிறைவேற்றவும், தமது மக்களுக்கான நியாயத்தை, நீதியை நிலைநாட்டவும் இலங்கை அரசு தோற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இப்போது இடம்பெறுகிறது. எமது மக்களுக்கு பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்பட வேண்டும் என நாம் தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் கேட்டுக்கொண்டுள்ளோம்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பித்த எமது கோரிக்கை இன்று வரை தொடர்கின்றது. இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்களை ஆராயவும் பொறுப்புக் கூறவும் வலியுறுத்துகின்றோம். -என்றார்.

## வாழ்வுக்கும்....

தேசிய தொற்றுநோயியல் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் சில வாரங்களாக அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இதன்போது சுவாசிப்பதற்கு செயற்கை சுவாச கருவியின் ( வென்டிலேட்டர்) உதவியை எவ்வாறு பெறவேண்டும் என்பதை விளக்கினார்.

குறித்த சந்தர்ப்பத்தில் தாம் வாழ்க்கைக்கும் மரணத்திற்கும் இடையில் போராடியதாக அவர் கூறினார்.

தமது உடல்நிலை மோசமடைந்து வருவதை தம்மால் காண முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தம்மை காப்பாற்றிய தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையின் மருத்துவர்கள், உள்ளிட்ட முன்னணி பணியாளர்கள், “பூமியில் வாழும் தெய்வங்கள்”என்றும் அவர் கூறினார்.

## யாழ்ப்பாணத்தில்....

மாவட்டத்திலும் கண்டறியப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 368 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. யாழ்.போதனா வைத்தியசாலையில் 20 பேரின் மாதிரிகளும் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

அவர்களில் 27 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 20 பேருக்கு கோவிட் -19 நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது.

அவர்களில் 3 பேர் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் சுன்னாகத்தில் கண்டறியப்பட்ட இலங்கை வங்கி ஊழியர் ஒருவருடன் நேரடித் தொடர்புடையவர்கள்.

மேலும் இருவர் இ.போ.சவின் யாழ்ப்பாணம் - கோண்டாவில் சாலையில் கண்டறியப்பட்டுள்ளனர். அங்கு 30 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டன. அவர்களில் ஒருவர் சாரதி பயிற்றுவிப்பாளர். மற்றையவர் சாலை அலுவலகத்தில் பணியாற்றுபவர்.

மேலும் மூவர் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களில் இருவர் யாழ். பல்கலைக் கழகத்தில் மார்ஷல் பதவியில் உள்ளவர் நேற்று அடையாளம் காணப்பட்ட நிலையில் அவரது குடும்ப உறுப்பினர்கள்.

மற்றயவர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் பணியாற்றுபவர்.

யாழ். நகரில் கே.கே.எஸ் வீதியில் கருவாட்டுக் கடை நடத்தும் ஒருவருக்கும் கொரோனா தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மேலும் 5 கைதிகளுக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இ.போ.சவின் காரைநகர் சாலையில் மேலும் 2 நடத்துநர்களுக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாநகர எல்லையில் உள்ள இராணுவ முகாம் சிப்பாய் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை மெலிஞ்சினைமுனையில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த மூவருக்கு தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலையில் 4 பேருக்கு தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 3 பேர் வெளிநாடு செல்வதற்காக பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டவர்கள். ஒருவர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்டபோது மாதிரிகள் பெறப்பட்டவர்.

செட்டிக்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முறிகண்டியைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது ." என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# “பஞ்ச ஈச்சர” பாடல் இறுவட்டு வெளியீடு




யாழ்ப்பாணம், மார்ச் 11

“பஞ்ச ஈச்சர” பாடல் இறுவட்டு மகா சிவராத்திரி தினமான இன்று இரவு 8 மணிக்கு மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்தப் பாடல் இறுவட்டை ஏழாலையூர் இளையதம்பி செல்வச்சந்திரன் தயாரித்துள்ளார். அத்துடன் பாடல்களையும் அவரே ஆக்கியுள்ளார். இசைக்கோன் பசுவதி கருணாகரன் இசையமைத்துள்ளார்.

ஈழத்தின் முன்னணி பாடகர்களான ஜே. ஆர். சுகுமார், எஸ். சாந்தன் கோகுலன், எஸ். சுலக்ஷன், ஜெயபாரதி ஆகியோருடன் தாயகத்தின் முன்னணி பாடகர்களும் இணைந்து பாடியுள்ளனர்.

## அம்பாள்....

அப்பாள் குளத்திலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்று முன்தினம் முன் ட்மீட்கப்பட்டிருந்த நிலையில் பெண்ணின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதன் முடிவின் அடிப்படையில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், பெண் கர்ப்பம் தரித்துள்ளதாகவும் மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஓ.எல். பரீட்சை....

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் நிலையமான கொழும்பு கோட்டையில் உள்ள ஆனந்த ஸ்ரஸ்தாலவுக்கு கண்காணிப்பு வருகை தந்த கல்வி அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடந்து முடிந்த 2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண பரீட்சை 10 நாள்கள் நடைபெற்றது. எங்கள் மாணவர்களில் 6 லட்சத்து 22 ஆயிரம் பேர் பரீட்சைக்கு அமர்ந்தனர். 4 ஆயிரத்து 513 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெற்றது. பெரும் சவால்களை எதிர்கொண்டு இந்த தேர்வை நடத்தினோம்.

க.பொ.த. சாதாரண பரீட்சை விடைத்தாள்களின் மதிப்பீடு எதிர்வரும் மார்ச் 27ஆம் திகதி ஆரம்பமாகும். அழகியல் பாடங்களுக்கான செயன் முறைப் பரீட்சைகள் வரும் மே மாதத்தில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பரிசோதனையின் ஆரம்பத்தில் பாதிக்கப்பட்ட 38 மாணவர்கள் மட்டுமே இருந்தனர். இறுதியில் 62 மாணவர்கள் இருந்தனர். இது போன்ற ஒரு சூழ்நிலையை எதிர்கொள்ள நாங்கள் முன்பு தயாராக இருந்தோம்.

நாடு முழுவதும் 40 சிறப்பு பரீட்சை நிலையங்களை அமைத்திருந்தோம். இதேபோல், தனிமைப்படுத்தப்பட்ட 322 மாணவர்கள் இருந்தனர்.

ஒவ்வொரு பரீட்சை மையத்திலும் ஒரு சிறப்பு வகுப்பறை அமைக்கப்பட்டிருந்தது. மேலும், கடந்த இரண்டு நாள்களின் மோசமான வானிலை காரணமாக, சில சிக்கல்கள் எழுந்தன. ஆனால் எங்களால் வினாத்தாள்களை பரீட்சை நிலையங்களுக்கு மிக வெற்றிகரமாக அனுப்ப முடிந்தது.

மே மாதத்தில் அழகியல் பாடங்களில் செயல்முறைப் பரீட்சையை நடத்த முடிவு செய்துள்ளோம். இதன் நன்மை என்னவென்றால், மாணவர்கள் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அதற்குத் தயாராக முடியும்.

அதன்படி, ஜூன் மாதத்தில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட்டு ஜூலை மாதத்தில் தரம் 12இல் உயர்தர வகுப்புகளைத் தொடங்க முடியும் - என்றார்.

## புர்காவுக்கு....

நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் தேசிய பாதுகாப்பில் ஏற்பட்ட விரிசல் நிலை காரணமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்க 09 சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் அதனைத் தடுக்க முடியாமற்போனது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் முறையான விசாரணைகளில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட உள்நாட்டில் மேலும் 99 சந்தேக நபர்களும், வெளிநாடுகளில் வாழ்ந்த 33 இலங்கைப் பிரஜைகளும் கைது செய்யப்பட்டனர்.

வெளிநாட்டு உளவுத்துறையுடன் இணைந்து, மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 54 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களில் 50 பேர் நாட்டிற்கு அழைத்துவரப்பட்டுள்ளதோடு, எஞ்சிய 4 பேரும் அந்த நாடுகளில் வழக்கு விசாரணைகளின் பின் நாட்டுக்கு அழைத்துவரப்படுவார்கள். இவர்கள் இனவாதச் செயற்பாடுகளுக்காக இலங்கையில் உள்ளவர்களுக்கு பணம் வழங்கியுள்ளனர்.-என்றார்.

## வடக்கில்....

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கோவில்களில் நடைபெறவுள்ள சிவராத்திரி வழிபாடுகளில் ஆகக் கூடியதாக 50 பேரை மட்டும் அனுமதிக்குமாறும் ஏனையோர் தத்தம் வீடுகளில் தங்கி நின்று எங்கும் நிறைந்துள்ள இறைவனை மனதிலிருத்தி வழிபாடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் சிவராத்திரி நாளுடன் இணைந்து கோவில்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார நிகழ்வுகளை இரத்துச் செய்து தனியே சமயாசார கிரியை நிகழ்வுகளை மட்டும் நடத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் மேற்கூறிய கட்டுப்பாட்டுகளுடன் நடைபெறவுள்ள இவ்வருட சிவராத்திரி வழிபாடுகளில் கொவிட் - 19 தொற்றுத் தடுப்புக்கான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறும் அவற்றைக் கண்காணிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது இவ்வேண்டுகோளுக்கு இந்து மதகுருமார்கள், இந்து மதத் தலைவர்கள், கோவில் அறங்காவலர் சபையினர், பக்தர்கள் மற்றும் பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (அ)

## நிபந்தனை....

வேற்பை வெளியிட்டுள்ளனர்.

தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக்காக போராடிய தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் ஆகியவற்றுக்கும், சம்பள உயர்வை சம்பள நிர்ணயசபை ஊடாகவேனும் நிர்ணயித்து வழங்குவதற்கு முன்வந்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தொழில் அமைச்சர் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

தமக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 2014 ஆம் ஆண்டு முதல் போராடிவருகின்றனர். 6 ஆண்டுகளுக்கு பிறகே அவர்களுக்கு ஆயிரம் ரூபா கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.

ஆனால் வேலை நாட்கள் குறைக்கப்படாமல், தொழில் சுமைகள் அதிகரிக்கப்படாமல்தான் தமக்கு இந்த சம்பள உயர்வு வேண்டும் என தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அத்துடன், தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு அது தொடர்ந்தும் அமுலில் இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

அதேவேளை, ஆயிரம் ரூபாவை வழங்கிவிட்டு வேலை நாட்களில் கை வைத்தால் அதனை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தனர்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.03.2021 வியாழக்கிழமை
சார்வரி, மாசி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# அரசியல் எப்போதுமே விசித்திரமானதா?

அண்மைக்காலமாக தெற்கின் அரசியலை மெதுவாக அசைக்கத் தொடங்கியிருக்கும் ஒரு விவகாரம்தான், பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவ விவகாரம். சில வாரங்களுக்கு முன்னர், இதுதொடர்பில் மொட்டு கூட்டணியின் பிரதான சிங்கள தேசியவாத முகமான விமல் வீரவன்ஸ, தலைமைத்துவம் தொடர்பில் சில கருத்துக்களை தெரிவித்திருந்தார். ஜனாதிபதி எவரோ, அவரே கட்சியின் தலைமைத்துவத்திலும் இருக்கவேண்டுமென்று கூறியிருந்தார். விமலின் கருத்துக்கள் மொட்டுக்குள் பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தன. ஆனால், தற்போது இதுதொடர்பில் மொட்டு அணிக்குள் இருக்கும் மூத்த தலைவர்களில் ஒருவரும், மஹிந்த ராஜபக்ஷவிற்கு மிகவும் நெருக்கமானவருமான வாசுதேவ நாணயக்காரவும் விமலின் அபிப்பிராயத்திற்கு வலுச் சேர்ப்பதுபோன்று ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். அதவாது, ஜனாதிபதி கோட்டாபயவிற்கு கட்சியின் தலைமைத்துவத்தை வழங்கவேண்டும். ஆகக் குறைந்தது கூட்டணிக்காவது அவர் தலைமை தாங்கவேண்டும். இல்லாவிட்டால், அவர் பலமற்றவராகி விடுவார்.

இதிலுள்ள சுவாரசியமான விடயம் என்னவென்றால், இதே வாசுதேவ நாணயக்காரதான், ஆரம்பத்தில் கோட்டாபய ராஜபக்ஷவை பகிரங்கமாக எதிர்த்துநின்றவர். கோட்டாபய ஜனாதிபதி வேட்டபாளராக வெளியில் தெரிந்த காலத்தில், அவர் இதற்கு பொருத்தமற்றவர் என்று கட்சிக்குள் சண்டை போட்டவர். ஆனால், அவ்வாறான வாசுதேவ இன்று இவ்வாறு கூறியிருக்கின்றார்.

இவ்வாறான கருத்துக்கள் ஏன் தொடர்ச்சியாக வெளிவருகின்றன? மஹிந்த ராஜபக்ஷ தற்போது தலைமைத்துவத்தில் இருக்கின்றபோதே இன்னொரு தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்கள் ஏன் அடிக்கடி எட்டிப் பார்க்கின்றன? ஆனால், இவ்வாறான அபிப்பிராயங்கள் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவோ அல்லது கோட்டாபய ராஜபக்ஷவோ எந்தவோர் அப்பிராயத்தையும் பொதுவெளியில் கூறவில்லை. அவ்வாறாயின், உள்ளுக்குள் ஓர் அமைதிப் புரட்சி இடம்பெறுகின்றதா? அண்மையில், அடுத்த ஜனாதிபதி வேட்டபாளர் பஸில் ராஜபக்ஷ என்றவாறான ஒரு செய்தியும் உலவவிடப்பட்டது.

உண்மையில் கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாக ரீதியில் சர்வ வல்லமையுள்ளவராக இருந்தபோதிலும்கூட, கட்சியில் அவர் ஒரு தீர்மானகரமான சக்தியல்ல. நிர்வாக ரீதியில் எவ்வாறான முடிவுகளை எடுத்தாலும், அதனை கட்டுபடுத்தக்கூடிய வல்லமையுடன் கட்சி இருக்கின்றது. உதாரணமாக, கிழக்கு கொள்கலன் முனைய விவகாரத்தில், ஆரம்பத்தில், இந்தியாவிற்கு வழங்கவேண்டுமென்னும் நிலைப்பாட்டிலேயே கோட்டாபய இருந்தார். அதனை பொதுவெளியிலும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், தொழிற்சங்கங்களின் கடுமையான எதிர்ப்புக்களை தொடர்ந்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பான உடன்பாட்டிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்திருந்தார். கட்சியும் மஹிந்தவின் முடிவையே ஆதரித்தது.

கட்சியும் நிர்வாகமும் இணையா கோடுகளாக இருக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், அண்மைக்காலமாக கட்சியின் தலைமைத்துவம் யாருக்கு என்னும் கேள்விகளும் அதற்கான பதில்களும் அடிக்கடி எட்டிப் பார்க்கின்றன. இதன் முடிவு எதுவாக இருக்குமென்பதை இப்போதைக்கு ஊகிக்க முடியாவிட்டாலும்கூட, நிச்சயம் எதிர்பாராத மாற்றங்களும் ஏற்படக் கூடும். அந்த மாற்றம் தெற்கின் அரசியலை புரட்டிப்போடலாம்.

ஏனெனில் இலங்கையின் அரசியலானது, அதிகம் ஆச்சரியங்களை ஒளித்துவைத்திருக்கின்றது. தகுந்த தருணங்களில் அவை வெளிப்படும். ஒரு வகையில், அரசியல் விசித்திரங்களுக்கு இது பஞ்சமில்லாத நாடு. இது தெற்கிற்கு மட்டுமல்ல, தமிழர்களுக்குமானதுதான்.

# ஸ்கன்டிநேவிய நாடுகளின் மனிதாபிமான கண்ணோட்டம்

- அலசுவது **இராஜதந்திரி** -

உலகில் மனிதாபிமான அணுகுமுறைகளில் அக்கறையை வெளிப்படுத்துவதிலும், ஜனநாயக பாரம்பரியங்களை மேற்கொள்வதிலும் ஸ்கன்டிநேவிய நாடுகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இதுதவிர, இராணுவ ரீதியான அணுகுமுறைகளை தவிர்ப்பதில்கூட ஸ்கன்டிநேவிய நாடுகள் முக்கிய பங்காற்றுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக, ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயலாளர் நாயகமாக நோர்வே நாட்டைச்சேர்ந்த ற்றைக்வே லை (Trygve Lie) 1942ஆம் ஆண்டு முதல் 1952ஆம் ஆண்டு வரை இருந்துள்ளமையை குறிப்பிடலாம்.

சர்வதேச ரீதியாக பல சிக்கலான பிரச்னைகளை தீர்த்துவைப்பதில் ஸ்கன்டிநேவிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. கைத்தொழில் முன்னேற்றம் கண்டவையாக இருக்கும் ஸ்கன்டிநேவிய நாடுகள், வல்லரசுப் போட்டிகளில் இருந்து விலகியிருப்பவையாக இருக்கின்றன. நீண்ட நெடுங்கால பகைமை பாராட்டிவந்த இஸ்ரேல்-பலஸ்தீனம் என்பவற்றுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதில் நோர்வே முக்கிய பங்காற்றியதுடன், பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத், மற்றும் இஸ்ரேலிய பிரதமராக இருந்த யிட்ஷக் ராபின் ஆகியோருக்கிடையே சமாதான உடன்படிக்கையை கொண்டுவருவதில் நோர்வே முக்கிய பங்காற்றியிருந்தது.

**நோபல் பரிசு**

ஸ்கன்டிநேவிய நாடான சுவீடன் நாடே கீர்த்திமிக்க பரிசான நோபல் பரிசை ஆண்டு தோறும் சமாதானம் உட்பட மானிட மேம்பாட்டுக்கு அரும் பணியாற்றியவர்களுக்காக வழங்கி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் 2002ஆம் ஆண்டு அரச தரப்புக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நோர்வே அனுசரணை வழங்கிய போது, ஸ்கன்டிநேவிய நாடுகள் நோர்வேக்கு ஒத்துழைப்பு வழங்கியதோடு, யுத்த நிறுத்த கண்காணிபாளர்களாகவும் ஸ்கன்டிநேவிய நாடுகளின் பிரதிநிதிகளே பணியாற்றியிருந்தனர்.

இந்நிலையில், எந்தவொரு பிரச்னையையும் மனிதாபிமானக் கண்கொண்டு அணுகுகின்ற போக்கையே ஸ்கன்டிநேவிய நாடுகள் கொண்டுள்ளன. இதன்காரணமாகவே நோர்வே உட்பட, இலங்கைப் பிரச்னையில் தமது கரிசனையை வெளிப்படுத்திய ஸ்கன்டிநேவிய நாடுகள், இலங்கைமீது ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இத்தடவை கொண்டுவரப்படவுள்ள பிரேரணை, இலங்கையை ஒரு வழிக்குக்கொண்டு வரும் விதத்தில் இறுக்கமானதாக அமைந்திருக்கவேண்டுமென வலியுறுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

**நோர்வேயின் தோல்வி**

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி, அரசியல் ரீதியான நகர்வுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதில் நோர்வேயும் அதனோடிணைந்த ஏனைய அனுசரணை நாடுகளும் தோல்வியைத்தழுவியிருக்கலாம்.


ஆனால், இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற விதம், அதனால் ஏற்பட்ட மனித அவலம் என்பவற்றை ஸ்கன்டிநேவிய நாடுகள் நன்கறிந்தே வைத்துள்ளன. இதன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைமீது இத்தடவை பிரிட்டனினால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை இறுக்கமானதாகவும், இலங்கையை ஒரு வழிக்குக் கொண்டு வருவதாகவும் இருக்கவேண்டுமென ஸ்கன்டிநேவிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன. ஸ்கன்டிநேவிய நாடுகள் மட்டுமல்ல. இலங்கையில் சமாதான சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த விரும்புகின்ற நாடுகள் அனைத்துமே இத்தடவை ஜெனிவாவில் இலங்கைமீதான பீரேரணை குறித்து தமது கரிசனையை வெளிப்படுத்தியவையாகவே இருக்கின்றன.

**இலங்கையின் தவறான நோக்கு**

இலங்கை அரச தரப்பு, இலங்கை மீதான பிரேரணை தோற்கடிக்கப்படவேண்டுமென குறிப்பிட்டு வருகின்றது. ஆனால், தோற்கடிப்பதற்கும் வெற்றிகொள்வதற்கும், ஜெனிவாவில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை இலங்கைக்கு எதிரானதானது எனக்கருதுவது தவறானதாகும். ஏனெனில், இலங்கையில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேம்படுத்தும் விதத்திலேயே ஜெனிவா பிரேரணை கொண்டுவரப்படுகின்றதென்பது குறிப்பிடத்தக்கது. காணாமல் ஆக்கப்பட்டோர், சிறைகளில் வருடக்கணக்கில் எவ்வித நீதி விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்போர், இதுதவிர இறுதிக்கட்ட யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என, எண்ணிலடங்காத மனிதாபிமான பிரச்னைகள் யுத்தம் முடிவுற்று பத்து வருடங்களாகியும் தீர்க்கப்படாதவையாக இருக்கின்றன.

இந்நிலையில், பெரிதும் மனிதாபிமான பிரச்னைகளை தீர்த்துவைப்பதற்கே முன்னுரிமையளிக்கும் நாடுகளாக ஸ்கன்டிநேவிய நாடுகள் இருப்பதன் காரணமாகவே இத்தடவை ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைமீதான பிரேரணை அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமென ஸ்கன்டிநேவிய நாடுகள் விரும்புகின்றன. ஸ்கன்டிநேவிய நாடுகளின் நியாயமான நிலைப்பாட்டையே இலங்கை அரசு தனக்கெதிரான நடவடிக்கை என்று குறிப்பிட்டு வருகின்றது. எது எப்படிப்பட்டபோதிலும், இத்தடவை ஜெனிவாவில் இலங்கைமீதான பிரேரணை, இலங்கை இலகுவில் நழுவல்போக்கைக் கொண்டிருக்க முடியாதவிதத்தில் அமைந்திருக்குமென்றே எதிர்பாரக்க முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 11 வியாழக்கிழமை மகா சிவராத்திரி
சார்வரி வருடம் - மாசி -27
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : திரயோதசி




11.03.2021

**மேடம்**
மூத்தோர் உடல்நலம் மேம்படும். திடீர் நட்பு உருவாகலாம். உங்களின் பெருந்தன்மையான செயல் மதிப்பைப் பெற்றுத் தரும். பணியிட சலசலப்பைப் புன்னகையுடன் சமாளிப்பீர்கள்.

**இடபம்**
மகிழ்ச்சியளிக்கும் செய்தி ஒன்று அலைபேசியில் வரும். வாழ்க்கைத்துணையின் கோபத்தைச் சமாளிப்பீர்கள். கண் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்னை தீர்ந்து நிம்மதி தரும்.

**மிதுனம்**
கடந்த இரு நாட்களாக இருந்து வந்த ஆதங்கம் தீரும். நேர்மையற்ற செயல் எதைச் செய்தாலும் மாட்டிக்கொள்வீர்கள். நண்பர்களின் வற்புறுத்தலால் தவறு செய்ய வேண்டாம்.

**கடகம்**
உல்லாசப் பயணம் மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கும். பாதியில் விட்டுப்போன முயற்சி இன்று மீண்டும் தொடரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். சுற்றியிருப்பவர்கள் உதவுவர்.

**சிம்மம்**
நல்லவர்களை இனம் காண்பீர்கள். பதறாமல் முடிவெடுப்பது நல்லது. நண்பர்கள் நற்செய்தி தருவர். எண்ணங்கள் அதிகமாக அலைபாயும். வங்கிச் சேமிப்புகளை உயர்த்தும் முயற்சி நல்ல பலன் தரும்.

**கன்னி**
பிள்ளைகளின் முயற்சியால் பொருளாதார நிலை உயரும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியவர்கள் விலகுவர். தடைப்பட்ட முயற்சிகள் நல்லபடியாக முடியும்.

**துலாம்**
எதையும் முடிவெடுக்க இயலாமல் குழப்பம் ஏற்படும். தேவையற்ற எண்ணங்களை விலக்கி நிம்மதி அடைவீர்கள். உங்களின் கட்டளையை நிறைவேற்ற காத்திருப்போர் அதிகரிப்பர்.

**விருட்சிகம்**
மனதிடம் காரணமாக நல்ல செயல் ஒன்றை முடிப்பீர்கள். தாயின் ஆசையை நிறைவேற்றி மகிழ்வீர்கள். நிம்மதி பிறக்கும். பெரிய திட்டம் ஒன்றைப் வகுத்து நிறைவேற்ற நாள் பார்ப்பீர்கள்.

**தனுசு**
எடுத்த முயற்சியில் நண்பர்களின் ஆலோசனை கைகொடுக்கும். குதூகலமாகப் பொழுது போகும். சோம்பல் காரணமாக சிரமம் வரும். எடுத்த முயற்சியில் தடை வந்தால் பயம் வேண்டாம்.

**மகரம்**
முன்பிருந்த அளவுக்கு வாழ்க்கை சுலபமாக இருக்காது. சமீபத்திய நிகழ்ச்சி ஒன்று அளித்த மனக்கலக்கம் குறையும். பழைய பயம் தீரும்படியான சம்பவம் ஒன்று நிகழும்.

**கும்பம்**
புகழ் பெறுவீர்கள். மனதில் சந்தோஷம் நிறைந்திருக்கும். செலவுகள் நிறைய வரும். மாற்று மருத்துவம் பயன்தரும். சக பணியாளர்களுடன் ஏற்பட்ட மன பேதம் விலகும்.

**மீனம்**
புதிய விஷயம் ஒன்றைத் தொடங்கும் முயற்சி பலிதமாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். வருமானம் கூடுவதால் சேமிப்பில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் தொற்று நீக்கும் செயல்பாடு

## பலர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்.பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் மாணவ ஒழுக்காற்று அதிகாரிகளில் ஒருவருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான மேலதிக முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொற்று அடையாளப்படுத்தப்பட்டதை அடுத்து, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வழிகாட்டல்களுக்கு அமைய, பல்கலைக்கழக கொவிட் 19 தொற்று பரவல் தடுப்புச் செயலணி தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான மேலதிக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாணவ ஒழுக்காற்று அதிகாரி கடமை நிமித்தம் பல்கலைக்கழகத்தினுள் நடமாடிய அனைத்து இடங்களிலும் நேற்று தொற்று நீக்கி விசிறப்பட்டுள்ளதுடன், மாணவ ஒழுக்காற்று அதிகாரி அலுவலகத்தில் பணி புரியும் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் நேற்று காலை பி. சி. ஆர் பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

அதேநேரம், கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் குறித்த மாணவ ஒழுக்காற்று அதிகாரியும் கலந்து கொண்டிருந்ததால், அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



அவர்களில் பலர் கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள். எனினும், அவர்கள் அனைவரையும் கட்டம் கட்டமாகப் பி. சி. ஆர் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் 108 சிவலிங்கங்களுக்கு அடியவர்கள் அபிசேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

நாவற்குழியில் அமைந்துள்ள சிவபூமி திருவாசக அரண்மனையில் மகா சிவராத்திரி விரத திருவிழா இன்று பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது. சிவனடியவர்கள் இன்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் நாளை வெள்ளிக்கிழமை அதி காலை 5 மணிவரை திருவாசக அரண்மனையில் எழுந்தருளி இருக்கும் 108 சிவலிங்கங்களுக்கும் தமது கரங்களால் அபிசேகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த அறிவிப்பை சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் வெளியிட்டுள்ளார். இந்துக்களின் விரதங்களின் ஒன்றான மகா சிவராத்திரி இன்று ஆகும்.

அதனால் விரதமிருக்கும் சிவனடியவர்கள் தமது கரங்களால் 108 சிவலிங்கங்களுக்கு அபிசேகம் செய்து நேர்த்திக்கடனை நிறைவேற்றும் வசதியை நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை நிர்வாகத்தினர் செய்துள்ளனர்.

### முறிந்து விழுந்தது மரம் வாகனங்கள் சேதம்!

கொழும்பு, மார்ச் 11

பதுளை, கிங்ஸ் வீதிக்கு அருகில் உள்ள புத்தர்சிலைக்கு அருகில் இருந்த அரச மரம் நேற்று பிற்பகல் பெய்த கடும் மழையில் வேரோடு முறிந்து வீழ்ந்ததில் இரண்டு கார்கள், இரண்டு லொறிகள், ஒரு கப் ரக வாகனம், ஓர் ஓட்டோ என்பன கடுமையாக சேதமடைந்துள்ளன.

அரச மரம் முறிந்து வீழ்ந்த சமயம் பயணித்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காரில் பயணித்தவர்கள் அதிர்ஷ்டவசமாக காயங்கள் இன்றி தப்பியுள்ளனர். மின்கம்பம் ஒன்று சேதமடைந்ததால் பதுளை நகரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

# ஆளும், எதிர்க்கட்சிகளுக்கு சபையில் வெவ்வேறு நீதியா?

## ஐக்கிய மக்கள் சக்தி கொதிப்பு

கொழும்பு, மார்ச் 11

பாராளுமன்றில் சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்த்தன கட்சி சார்பின்றி நடுநிலையோடு செயற்படவேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று அழைப்பு விடுத்துள்ளது.

நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷ விதானகே பேசும்போது, அவரை முக கவசம் அணியுமாறு சபாநாயகர் வலியுறுத்தினார்.

அதேநேரம் ஹேஷ விதானகே எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் சமல் ராஜபக்ஷ முக கவசம் இன்றி பதிலளிக்க அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சபாநாயகரின் இந்த பக்கசார்பான நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார சபையில் சுட்டிக்காட்டினார். அத்துடன், பாராளுமன்றில் சபாநாயகர் பக்கச்சார்பின்றி நடுநிலையுடன் செயற்பட வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார்.



# இலங்கை விமான படைக்கு புதிய பிரதானி நியமனம்

கொழும்பு, மார்ச்.11

இலங்கை விமானப்படையின் பிரதானியாக எயர் வைஸ் மார்ஷல் பிரசன்ன பயோவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

விமானப்படை தலைமையகத்தில் இடம்பெற்ற விழாவில், விமானப்படை தளபதி எயர் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவிடமிருந்து எயர் வைஸ் மார்ஷல் பிரசன்னா பயோ நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். (எ)



# இந்து கலைக் களஞ்சியத்தை வெளியிட்டு வைத்தார் பிரதமர்

கொழும்பு, மார்ச் 11

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இந்து சமய, கலா சார அலுவல்கள் திணைக் களத்தினால் மீள்பதிப்புச் செய்யப்பட்ட பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்ட இந்து கலைக் களஞ்சியம் புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜ பக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்து சமய, கலாசார அலு வல்கள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இந்து கலைக் களஞ்சிய உருவாக்கப் பணி 2014 ஆம் ஆண்டில் பன் னிரண்டு தொகுதிகளை நிறைவு செய்திருந்தது.

மீள்பதிப்பு செய்யப்பட்ட இந்து கலைக் களஞ்சியத்தின் ஆரம்ப பிரதிகள் பிரதமரினால் இந்து மதகுருமார்களுக்கு வழங் கப்பட்டன.

அதனை தொடர்ந்து அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, பாரா ளுமன்ற உறுப்பினர்களான சுரேன் ராகவன், அங்கஜன் இராமநாதன், எம்.ரமேஷ்வரன் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச் சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோருக் கும் இந்து கலைக் களஞ்சியத் தின் பிரதிகள் வழங்கப்பட்டன.

# சஹ்ரானுடன் ஹக்கீமுக்கு மிகநெருக்கமான தொடர்பு!

## சபையில் மஹிந்தானந்த பரபரப்பு தகவல்



கொழும்பு, மார்ச் 11

**“உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு முன்னர் சஹ்ரான் குழுவுக்கும் ஹக்கீமுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது. தேர்தலுக்கு அக் குழு உதவியுள்ளது” என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

“சம்பவமொன்றில் காயம டைந்த சஹ்ரான் குழுவைச் சேர்ந்த ஒருவரை பார்ப்பதற்கு? வைத்தியசாலைக்கு ஹக்கீம் சென்றிருந்தார். அந்த விவ காரம் தொடர்பில் தகவல்கள் கிடைத்தவுடன், அவரிடம் விசாரித்துள்ளனர்” என்றும் மஹிந்தானந்த கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசார ணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான சபை ஒத்தி வைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

வைத்தியசாலைக்குச் சென் றமை தொடர்பில் ஹக்கீமிடம் விசாரித்தபோது, பிறந்த குழந்தையொன்றை பார்ப்பதா கவே சென்றாரெனப் பதிலளித்துள் ளார். ஹக்கீம் மட்டுமே, புதி தாய் பிறந்த குழந்தையை பார்ப்ப தற்கு ஆண்கள் வாட்டுக்குச் சென்ற ஒருவராவார்-என்றார்.

# வாக்குகளைப் பெற ராஜபக்ஷவினர் ஏப்ரல் தாக்குதலை பயன்படுத்தினர்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 11

தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்கான ஒரு கருவியாக ராஜபக்ஷவினர் ஈஸ்டர் தாக்கு தல்களை பயன்படுத்தினர் என மக்கள் விடுதலை முன்னணி யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவினால் நிய மிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பாக ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிதாக எதுவும் செய்யவில்லை என்றும், 60,000 பக்க அறிக்கை யின் 20,000 பக்கங்கள் மட் டுமே வெளியிடப்பட்டுள்ள தாவும் அவர் குறிப்பிட்டார். முக்கிய குற்றவாளிகளை அறிக்கை வெளிக்கொண்டுவரவில்லை என்றும் சஹ்ரான் தான் முக்கிய தற்கொலை குண்டுதாரி என அந்த அறிக்கை தெரிவிப்பதா கக் கூறிய பிமல் ரத்நாயக்க, இந்த விடயம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று எனவும் குறிப்பிட்டார்.

உளவுத்துறை தீவிரவாத அமைப்புகளுக்கு பணம் கொடுத் தது என்ற உண்மையை பல ஆண்டுகளுக்கு முன்பு, முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ ஏற்றுக்கொண்டார் என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் இந்த உண்மை தொடர்பாக குறித்த ஆணைக் குழு தற்போதைய பிரதமரி டமோ அல்லது தற்போதைய ஜனாதிபதியிடமோ எந்த அறிக் கைகளையும் பதிவு செய்ய வில்லை என்றும் பிமல் ரத் நாயக்க குற்றம் சாட்டினார்.

# போலி நாணயத்தாள்களில் எச்சரிக்கையாக இருங்கள்!

கொழும்பு, மார்ச் 11

5,000, 1,000 ரூபா போலி நாணயத்தாள்கள் தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென பொலி ஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

களனிப் பகுதியில் நேற்று முன்தினம் இருவர் 1,000 மற் றும் 5,000 ரூபா போலி நாண யத்தாள்களுடன் கைது செய்யப் பட்டுள்ளனர். அந்த பகுதியி லுள்ள வர்த்தக நிலையமொன் றில் போலி நாணயத்தாள்களை விநியோகித்த பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக் காக சந்தேக நபர்கள் குற்றவி யல் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ரூபா 1000 மற்றும் ரூபா 5000 போலி நாணயத்தாள் களை அச்சிட்டு விநியோகிப் பது குறித்து பொலிஸாருக்கு பல முறைப்பாடுகள் கிடைத் துள்ளன.

நாணயத்தாள்களை பரி மாறிக்கொள்ளும்போது பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் அவை போலி நாணயத்தாள் களா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் கோரியுள்ளனர்.



# ஜே.சி.பி-மோட்டார் சைக்கிள் மோதி கிளிநொச்சியில் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, மார்ச் 11

ஜே.சி.பி வாகனம்-மோட் டார் சைக்கிள் மோதி இடம் பெற்ற விபத்தில் ஒருவர் உயிரி ழந்தார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி தருமபுரம் 7ஆம் யுனிட் பகுதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள் ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படு காயமடைந்து ஆபத்தான நிலை யில் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் பட்ட நிலையில் அங்கு உயிரிழந் தார் என்று பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் தரும புரம் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

# விசாரணைகளுக்குப் பின்னர் இழுத்து செல்லப்பட்ட ரஞ்சன்



கொழும்பு, மார்ச் 11

சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் இலங்கைப் பத்திரிகை பேரவைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற சாட்சி விசாரணையின் பின்னர் ரஞ்சன் ராமநாயக்க மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ரஞ்சன் ராமநாயக்கவை திருப்ப சிறைக்கு அழைத்துச் செல்லும்போது குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது. அவரை சிறை அதிகாரிகள் பஸ்ஸுக்குள் இழுத்துச் சென்று ஏற்ற முயன்றனர்.

இதன்போது கொலை செய்யவில்லை, நீதிக்காகவே போராடினேன் என்னை இப்படி நடத்தவேண்டாம்” என அவர் கூச்சலிட்டார்.

எனினும் அதனை கண்டுகொள்ளாத சிறை அதிகாரிகள் அவரை பலவந்தமாக இழுத்துச் சென்று பஸ்ஸில் ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.இதன்போது எடுக்கப்பட்ட காணொலி ரஞ்சன் ராமநாயக்கவின் உத்தியோபூர்வ யூரியூப் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

# ஹிருணிகா மீதான பிடியாணை வாபஸ்

கொழும்பு, மார்ச் 11

இளைஞரை கடத்திச் சென் றமை தொடர்பான வழக்கு விசாரணையில் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமைக்காக முன்னாள் பராளுமன்ற உறுப்பி னர் ஹிருணிகா பிரேமச்சந் திரவை கைது செய்வதற்காக பிறப்பிக்கப்பட்ட பிடியா ணையை கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று மீளப்பெற்றுக் கொண்டது.

பிடியாணை உத்தரவை கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அமல் ரட்ணராஜா நேற்றுக் காலை வெளியிட் டார்.

முன்னாள் எம்.பி. ஹிரு ணிகா பிரேமச்சந்திர தனது சட்ட பிரதிநிதிகளுடன் நீதி மன்றத்தில் ஆஜராகவில்லை என்று கூறி, பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இருப்பினும், பிடியாணை பிறப்பித்து நீதிபதி உத்தர விட்ட சில நிமிடங்களுக்குப் பிறகு, ஹிருணிகா பிரேமச்சந் திரா நீதிமன்றத்துக்கு வந்தார்.

இந்த வழக்கு ஜூன் 17 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும்.

2015 ஆம் ஆண்டு டிசெம் பர் 21 ஆம் திகதி தெமட்ட கொட பகுதியில் ஒரு கடையில் பணிபுரிந்த ஒரு இளைஞரைக் கடத்தி, அவரை பிணைக் கைதியாக வைத்திருந்தார் என ஹிருணிகா பிரேமச்சந்திர மீது சட்டமா அதிபர் வழக்கு பதிவு செய்துள்ளார்.

### ரி.ஐ.டியின் விசாரணைக்கு எதிராக

# கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் சபையில் வாயை கட்டிப் போராட்டம்!



கிளிநொச்சி, மார்ச் 11

கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளமை காரணமாக பிரதேச சபை அமர்வை 5 நிமிடங்கள் வரை ஒத்திவைத்து சபைக்குள் தங்கள் வாயை கறுப்புத் துணியால் கட்டி உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேசசபை உறுப்பினர் செல்வநாயகம் என்பவரே விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தவிசாளர்-

இந்த சபை அமைந்த நாள் தொடக்கம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினால் தமது சபை பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்குகிறது. வள்ளுவர் சிலையில் 'ஈழம்' என்ற சொல் இருப்பதாக கூறி முதன்முதலில் விசாரணை ஆரம்பித்தனர். பின்னர் அக்கிராச மன்னன் திறப்பு விழா தொடர்பிலும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைப்பது தொடர்பிலும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொண்டமைக்காக தவிசாளர் உபதவிசாளர் உறுப்பினர்கள் சிலர் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக உறுப்பினர் செல்வநாயகத்திற்கு தற்போது அழைப்பு வந்திருக்கிறது. இப்போது நாடே கொரோனா நோயினால் அச்சத்துடன் இருக்கும்வேளையில் அவரை கிளிநொச்சியில் கூட விசாரிக்காமல் கொழும்புக்கு அழைப்பதென்பது உறுப்பினர்களை அச்சுறுத்தும் செயற்பாடு - என்றார். (அ)

# 500,000 கொவிஷீல்ட் தடுப்பூசிகள் இம்மாதம் இலங்கை வந்துசேரும்!

கொழும்பு, மார்ச் 11

இந்தியாவின் சீரம் - நிறுவனத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் மேலும் 5 இலட்சம் அஸ்ட்ராசெனேகா -கொவிஷீல்ட் தடுப்பூசிகள் இம்மாதம் இலங்கைக்கு வந்து சேரும் என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் இருந்து 1.5 மில்லியன் தடுப்பூசிகளைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. ஒரு தடுப்பூசிக்கு 5.25 அமெரிக்க டொலர்கள் அடிப் படையில் இதற்காக முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் 5 இலட்சம் தடுப்பூசிகள் பெப்ரவரி இறுதியில் வழங்கப்பட்டன.

இந்நிலையில், மேலும் 5 இலட்சம் தடுப்பூசிகள் இம்மாதம் இலங்கைக்கு வந்து சேரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய 5 இலட்சம் தடுப்பூசிகளை அடுத்த மாதம் வழங்குவதற்கு குறித்த நிறுவனம் இணங்கியுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர் தினுஷ தசநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கைக்கு வழங்க உறுதியளிக்கப்பட்ட இந்தியாவின் சீரம் நிறுவனம் தயாரித்த கொவிஷீல்ட் தடுப்பூசி ஒப்பந்தத்தின் பிரகாரம் மார்ச், ஏப்ரல் மாதங்களில் இலங்கைக்குக் கிடைக்காது என அறிவிக்கப்பட்டது.

மார்ச் 03 திகதியிடப்பட்ட சீரம் நிறுவனத்தின் கடிதத்தில் இலங்கைக்கு வழங்க உறுதியளிக்கப்பட்ட 10 இலட்சம் தடுப்பூசிகளில் தாமதம் ஏற்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

தடுப்பூசி உற்பத்தித் திட்டங்களில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் காரணமாக உறுதியளித்த காலத்தில் தடுப்பூசிகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பில் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்தே இலங்கைக்கு ஒப்பந்தத்தின்படி தடுப்பூசிகளை வழங்க சீரம் நிறுவனம் சம்மதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

# வடக்கு சுகாதாரத் தொண்டர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் நீடிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 11

தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் போராட்டத்தை முன்னெடுத்து வரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் போராட்டம் 10ஆவது நாளாக தொடர்கின்றது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டுவந்த தமக்கு எவருமே தீர்வை வழங்காத நிலையில் நேற்றுமுன்தினம் முதல் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்புப் போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

மாகாண ஆளுநர் செயலக வளாகத்தில் கொட்டகை அமைத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் சுகாதாரப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர்களாக கடமையாற்றிய சுகாதாரப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வகையில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

எனினும், இந்த நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றதாக பாதிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# மன்னாரில் இதுவரை 11,230 பேருக்கு பி.சி.ஆர்.

மன்னார், மார்ச் 11

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 11 ஆயிரத்து 230 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் 305 கொரோனா தொற்றாளர்கள் தற்போது வரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன்கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் 17 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 8 பேர் மன்னார் மீன் சந்தைப் பகுதியில் மீன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், 5 பேர் ஏற்கனவே கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட நுண்கடன் நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், இருவர் மாந்தை மேற்குப் பகுதியில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் முதல் நிலை தொடர்பாளராகவும், ஒருவர் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் கடமையாற்றியவரோடு நெருங்கிப் பழகியவராகவும், மேலும் ஒருவர் கர்ப்பிணிப் பெண் ஒருவராகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முசலிப் பகுதியில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட 83 பி.சி.ஆர்.பரிசோதனைகளின் போது எவருக்கும் தொற்று இல்லை என தெரியவந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தற்போதுவரை 305 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் 288 நபர்கள் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தில் 38 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இன்று மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் இடம்பெறும் மஹா சிவராத்திரி நிகழ்வில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு பக்தர்களுடன் கடுமையான சுகாதார நடைமுறைகளுடன் இடம்பெற உள்ளது. கண்காணிப்பு நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர் - என்றார். (அ)

# சுருட்டு பற்றிய முதியவர் தீயில் எரிந்து உயிரிழப்பு!

முல்லைத்தீவு, மார்ச் 11

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தீயில் எரிந்து காயமடைந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் இறந்தார்.

கடந்த 6ஆம் திகதி குறித்த முதியவர் சுருட்டை பற்ற வைத்துள்ளார். இதன்போது தவறுதலாக அவரது சாரத்தில் தீ பற்றியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

சம்பவத்தில் சங்கரப்பிள்ளை வேதாரணியம் (வயது-79) என்ற முதியவரே இறந்தார்.

அவரது மரணம் தொடர்பாக வவுனியாநகர திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். அதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

# நாட்டில் நில அளவைக்கு தென்கொரிய நிறுவனம்!

### அரச அளவையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 11

கொரியாவிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக இரகசியமாக நாட்டில் நில அளவீட்டுத் திட்டத்தை தொடங்க அரசாங்கம் தயாராகி வருவதாக அரச அளவையாளர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

சங்கத்தின் தலைவர் துமிந்த பண்டார, மாத்தளையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையில்-

முன்னாள் அரசாங்கம் இந்த திட்டத்தை ஒரு அமெரிக்க நிறுவனத்துடன் செயல்படுத்த முயன்றது. திட்டத்தின் நோக்கம் தெளிவாகக் கூறப்படவில்லை.

இது தொடர்பான ஆவணம் 2019 ஒக்ரோபர் 31 ஆம் திகதி கையெழுத்திடப்பட்டது.

இதன் தொடர்புடைய நடவடிக்கைகள் இரகசியமாக எடுக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள்-என்றார். (அ)



# மிகப்பெரிய யானை ‘ரேவதா’ உயிரிழந்தது!

கொழும்பு, மார்ச் 11

கலா வாவிக்கும் பலலு வாவிக்கும் இடையிலான பள்ளத்தாக்கில் சுதந்திரமாக சுற்றித் திரிந்த ‘ரேவதா’ என்ற கம்பீரமான யானை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கையை பாதுகாப்பதற்காக முறையற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கிய பின்னர் அந்த யானை உயிரிழந்தாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கூறினர்.

இந்த யானையின் திடீர் மரணம் குறித்து அதிகாரிகள் பக்கச்சார்பற்ற விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளை கடுமையாக தண்டிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

# பாரதிய ஜனதா கட்சி இலங்கையில் இல்லை!

## அமைச்சர் ரமேஷ் பத்திரண கூறுகிறார்



**கொழும்பு, மார்ச் 11**

**இலங்கையில் நாம் அறிந்த வகையில் பாரதிய ஜனதா கட்சியை ஆரம்பிப்பதற்கான உத்தியோகபூர்வ செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் பாரதிய ஜனதா கட்சியின் செயல்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில் அண்மையில் அந்த நாட்டு அரசியல்வாதியொருவரால் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இலங்கையிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான சட்டரீதியான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமே காணப்படுகின்றது.

நாம் அறிந்த வகையில் இலங்கையில் அவ்வாறானதொரு கட்சியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே நாட்டு மக்கள் இது தொடர்பில் கலவரமடையத் தேவையில்லை. அவ்வாறான ஏற்பாடுகள் பாரதிய ஜனதா கட்சிக்கு இல்லை-என்றார்.

# கொழும்பு, கம்பஹாவில் தடுப்பூசி வழங்கல் நிறைவடைந்த பின்னரே ஏனையவர்களுக்கு!

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கு கொவிட்-19 தடுப்பூசி மருந்து வழங்கும் திட்டம் நிறைவடைந்த பின்னரே ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் மருத்துவ வல்லுநர் சுதர்ஷினி பெர்னாண் டோபுள்ளே தெரிவித்தார். கொழும்பு, கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி மருந்து வழங்கும் எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

“கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இருந்து தினமும் அதிக எண்ணிக்கையிலான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

கொவிட் -19 தடுப்பூசி செயல்முறை தொடர்ந்து அந்த இரு மாவட்டங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர், மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறினார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# உண்மையான குற்றவாளிகள் உடன் தூக்கிலிடப்பட வேண்டும்

## வலியுறுத்துகின்றது சஜித் அணி

கொழும்பு, மார்ச் 11

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு உடன் மரணதண்டனை நிறைவேற்றபட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான குற்றவாளிகளை மறைத்து ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையை ஏற்க முடியாது.

இந்தத் தாக்குதல் திட்டமிட்ட தாக்குதல். நாட்டின் ஆட்சிப்பீடத்துக்குச் சவால் விட்ட தாக்குதல்.

எனவே, ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு உடன் மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆனால், இது இந்த ஆட்சியில் நடப்பது சந்தேகமே. அதனால்தான் பேராயர் தலைமையிலான தரப்பினர் சர்வதேச விசாரணையைக் கோரும் நிலைக்கு வந்துள்ளனர்.

மனிதப் படுகொலைகளை அரங்கேற்றியவர்களுக்கு மரண தண்டனையே பரிசாகக் கிடைக்க வேண்டும். அதையடுத்து அவர்களைப் பாதுகாப்பது நாட்டில் மேலும் பெரும் விபரீதங்களுக்கே வழிவகுக்கும்-என்றார்.

# தனித்திருந்த வயோதிபப் பெண்ணின் 42 தங்கப் பவுண் தாலிக்கொடி திருட்டு

## வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 11

தனிமையில் வாழும் வயோதிபப் பெண்ணின் சுமார் 42 தங்கப் பவுண் தாலிக்கொடி திருட்டுப் போயுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை இலந்தைக்காடு பகுதியில் வசிக்கும் வயோதிபப் பெண்ணால் வழங்கப்பட்டுள்ளது.

அவரது பிள்ளைகள் வெளிநாட்டில் வசிப்பதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது தாலிக்கொடி திருட்டுப் போனமை தொடர்பில் சிலரில் சந்தேகம் உள்ளதாகவும் முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

தான் பாதுகாப்பாக வைத்த இடத்தில் தாலிக்கொடி கடந்த வாரம்வரை இருந்ததாகவும் நேற்றுமுன்தினம் காணாமற் போயுள்ளதாகவும் முறைப்பாட்டில் வயோதிபப் பெண் தெரிவித்துள்ளார்.

சம்பவம்தொடர்பில்வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை காப்பாற்றுவதற்கு அரசு எத்தனம்!

## விமல் வீவரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 11

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்களை காப்பாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொள்வதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய அனைவருக்கு எதிராகவும் குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இதேவேளை ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பலரை, தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் காப்பாற்றுவதற்கு முயற்சித்து வருகின்றனர்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மறைக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது-என்றார்.

# வவுனியா தெற்கு தவிசாளர் பதவியிலிருந்து விலகினார்!

வவுனியா, மார்ச் 11

கூட்டமைப்பு வசம் உள்ள வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் ரெலோ சார்பாக தவிசாளர் பதவி வகித்தது.நடராஜசிங்கம், (ரவி) பதவி விலகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது.

அதற்கமைய சபையின் தவிசாளர் பதவியை, ஆட்சி காலப்பகுதியில் இரண்டரை வருடங்கள் என பங்கிட்டு வகிப்பதற்கு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் மற்றும் ரெலோ கட்சிகளுக்கிடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

அதற்கமைய வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதுடன், அது தொடர்பாக அவர் கையெழுத்திட்ட கடிதம் நேற்று புதன்கிழமை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திடம் கையளிக்கப்பட்டு, பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கடிதம், மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புகைப்படக்கலையின் முன்னோடி: ஜூலியா மார்கரெட் கமெரூன் (1815 - 1879)

## பொகவந்தலாவையில் துயிலும் கலைத் தேவதை!

——— மு.நித்தியானந்தன்

பத்தொன்பதாம் நூற்றாண்டு புகைப் படக்கலையின் மேதையாகக் கருதப்படும் ஜூலியா மார்கரெட் கமெரூன் (Julia Margaret Cameron)என்ற விக்டோரியகாலப் பெண் ஆளுமையின் கல்லறை, பொகவந்தலாவையில் அமைந்துள்ள சென். மேரிஸ் அங்கிலிக்கன் தேவாலயத்தில் உள்ளது. அதன் அயலிலேயே அவரது கணவர் சார்ள்ஸ் கமெரூன் கல்லறையும் காணப்படுகிறது.

கமெரா (Camera) என்பது ஆண் கலைஞர்களுக்கே உரிய ஒன்றாகக் கருதப்பட்ட காலத்தில், தனது 48ஆவது வயதில் தனது மகள் தனக்கு நத்தார் பரிசாக வழங்கிய, பெரிய மரச்சட்டகத்திலான புகைப்படக்கருவியைக்கொண்டு அற்புதமான, கலாபூர்வமான புகைப்படங்களை எடுத்துத்தள்ளினார் திருமதி கமெரூன்.

“அம்மா, நீ தனிமையில் இருக்கும் போது புகைப்படங்களை எடுப்பது உனக்கு உற்சாகமளிக்கக்கூடும்” என்று மகள் வழங்கிய புகைப்படக்கருவி, கமெரூனின் வாழ்க்கையையே மாற்றிப் போட்டது. புகைப்படக்கலையின் நெளிவுசுழிவுகள் பூரணமாக தெரியவராத காலத்தில், தானே சரியான ஒளியில், கூர்மையான குவியத்தில் (focus) படத்தை எடுத்து, அதனைக் கடுமையான இரசாயன கலவைகொண்டு இருட்டறையில் கழுவி, காயவைத்து, ‘பிரிண்ட்’ போட்டு, தனது படங்களுக்குப் பதிப்புரிமை கோரி, ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் புகைப்படக் கண்காட்சிகளையும் நடத்திய பெரும் கலைஞர் அவர்.

“நான் ஒன்றும் அவ்வளவு பிரபல்யம் பெற்றவள் அல்ல. கலாபூர்வமான கண்கொண்டு, எனது புகைப்படங்களை ரசிக்கத் தெரிந்தவர்களே அவற்றைப் பாராட்டக்கூடும்” என்று அவர் கூறுகிறார்.

இந்தியாவில், கிழக்கிந்திய கம்பெனியில் உயர் அதிகாரியாகத் திகழ்ந்த ஜேம்ஸ், அடெலின் தம்பதியருக்கு நான்காவது மகளாக கல்கத்தாவில் பிறந்த கமெரூன், பிரான்ஸிலும் இங்கிலாந்திலும் கல்வி பயின்று, இளம் பெண்ணாக இந்தியா திரும்புகிறார். கல்கத்தாவில் செல்வாக்கு மிக்க ஆங்கிலோ - இந்திய சமூகத்தில் அழகும் அறிவும்கொண்ட பெண்களாக கமெரூனும் அவரது சகோதரிகளும் திகழ்ந்துள்ளனர். கமெரூன் தென் ஆபிரிக்காவிற்கு சென்றிருந்த போதுதான் சார்ள்ஸை சந்தித்து அவரைத் திருமணம் செய்கிறார். அப்போது சார்ள்ஸ், கமெரூனைவிட 20 வயது மூத்தவர் தனது முதல் மனைவியை இழந்திருந்தார். சிறந்த சட்ட வல்லுநரான சார்ள்ஸ், இந்திய சட்ட கமிஷனின் முதல் தலைவராகத் திகழ்ந்தவர். இலங்கையின் கோல்புறூக் - கமெரூன் சட்ட வரைபுகளில் சார்ள்ஸ் பெரும் பங்குவகித்திருக்கிறார். இலங்கையில் அவர் கோப்பி, இறப்பர் தோட்டங்களை உடைமையாகக் கொண்டிருக்கிறார். இந்தியாவில் ஒய்வுபெற்று, அவர் லண்டன் திரும்பியபோது, இலங்கையின் பெருந்தோட்ட வருமானங்களிலேயே வாழ்ந்திருந்தார்.

சார்ள்ஸ் கமெரூன் இங்கிலாந்து திரும்பிய பின், லண்டனிலிருந்து தெற்கே 80 மைல் தொலைவில் அமைந்த ஐல் ஒவ் வைற் (Isle of Wight) என்னும் அழகிய கடற்கரையோரத்தை ஒட்டியிருந்த Freshwater என்ற இடத்திலேயே வாழ்ந்திருந்தார். அவர்கள் வாழ்ந்த அந்த இல்லம், இன்று ஜூலியா மார்கரெட் கமெரூனின் கண்காட்சியகமாகத் திகழ்கிறது. உள்ளூர் மீனவரிடமிருந்து அடுத்தடுத்த இரண்டு குடில்களை வாங்கி, Gothic அமைப்பில் அந்த இல்லத்தைக் கட்டி, Dimbola Lodge என்று வீட்டிற்குப் பெயருமிட்டார். இந்த Dimbola என்ற பெயர், கமெரூன் இலங்கையில் கோப்பித் தோட்டமாக வாங்கி, பின் தேயிலைத் தோட்டமாக மாற்றம் பெற்ற Dimbula Estate என்ற பெயரிலிருந்து பெறப்பட்டதாக, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற நாவலாசிரியராகவும், சிறுகதை எழுத்தாளராகவும் திகழ்ந்த Virginia Woolf, தனது பூட்டியான ஜூலியா கமெரூன் பற்றி எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிடுகிறார். இந்த இல்லத்தில் கமெரூன் 1860இலிருந்து 1875வரை பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். அங்கு நிலக்கரி சேமித்து வைக்கப்பட்டிருந்த அறையை dark room ஆகவும், இன்னுமொரு கோழிக்குடாப்பை glass house ஆகவும் மாற்றி அமைத்தார் கமெரூன். இங்கு



தான் இவரது புகழ் மிக்க புகைப்படங்கள் தயாராகின. முடிக்கப் பெறாத, தனது சுயவரலாறுபோன்ற கட்டுரை ஒன்றை ஜூலியா கமெரூன் The Annals of My Glass House என்ற தலைப்பில் 1874இல் எழுதியிருக்கிறார். இந்த இல்லம் அக்கால உயர்குடி விக்டோரிய விழுமியங்களுக்கெல்லாம் மாறானதாகவே இருந்திருக்கிறது. ஆறு பிள்ளைகளின் தாயாராகத் திகழ்ந்த கமெரூன் இலக்கிய, நாடக, ஓவியத் துறைகளில் எல்லாம் பேரார்வம் கொண்டவராக இருந்திருக்கிறார். கடிதங்கள் எழுதுவதில் அவரை யாரும் விஞ்சமுடியாது. அவர் கொஞ்சம் “விசித்திரமானவர்” (eccentric) என்றும் கூறப்படுகிறது.

கமெரூன் அக்காலகட்டத்தில் வாழ்ந்த மிகப்பெரும் இலக்கிய ஆளுமைகளுடன், விஞ்ஞானிகளுடன், ஓவியர்களுடன் மிக நெருங்கிய தொடர்புகள் கொண்டவராக இருந்திருக்கிறார். பிரித்தானியாவின் ஆஸ்தான கவிஞராகத் திகழ்ந்த அல்பிரட் டென்னிஸன், இவர்களது வீட்டுக்கு அடுத்த வீட்டிலேயே வாழ்ந்திருக்கிறார்.

சேர் ஹென்றி டெய்லர் (Sir Henry Taylor) என்ற பிரபல ஆங்கிலக் கவிஞர் கமெரூனின் புகைப்படங்களின் ஆண் மொடலாக இருந்திருக்கிறார். ஷேக்ஸ்பியரின் பல நாடகங்களின் கதைமாந்தராக ஹென்றி டெய்லரை அமர்த்திவைத்து, நீண்ட நேரம் pause கொடுக்கவைத்து, அவரைப் பாடாய்ப்படுத்தி இருக்கிறார். பிரித்தானியாவின் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்படலாம் என்று ஹென்றி டெய்லர் கருதப்பட்டிருக்கிறார். அவர் கமெரூனின் மிக நெருக்கமான நண்பராக இருந்து, அவருக்குப் பெரும் உற்சாகம் கொடுத்திருக்கிறார். ஹென்றி டெய்லர் தனது கவிதைகளைச் சொல்லச்சொல்ல, கமெரூன் உட்கார்ந்திருந்து தாளில் எழுதியிருக்கிறார். கவிஞர் டென்னிஸனிடம் குரலை உயர்த்திச் சத்தம் போடும் அளவிற்கு அவரோடும் கமெரூன் நெருக்கமாக இருந்திருக்கிறார். கவிஞர் டென்னிஸனும் கமெரூனும் ஆழ்ந்த உரையாடல்களில் இறங்கிவிட்டால், டென்னிஸனின் மனைவி “இனி தனக்கு இங்கு வேலை இல்லை” என்பதுபோல் இவர்களை விட்டுவிட்டுப் போய்விடுவார்.

இங்கிலாந்தின் பிரபல்ய கணிதவியலாளரும், வானியல் விஞ்ஞானியுமான Sir John Herschel கமெரூனின் ஆசிரியரும், சமய குருவும், நெருங்கிய நண்பரும் ஆவார். முப்பது ஆண்டுகளுக்கு மேலான உறவு அவர்களுடையது. ஜோன் ஹெர்செலை வைத்து கமெரூன் எடுத்த படம் மிகப் பிரசித்தமானது. தனது கமெராவின் முன்னால் நிற்கும் பெரும் மனிதர்களின் உள்ளார்ந்த பெரும் பண்புகளையும் அவர்களின் புற உருவத்தினையும் சிறப்பாகக் கொண்டு வந்துவிடவேண்டும் என்று தனது ஆத்மா முனைப்புக் கொள்ளும் என்று கமெரூன் தனது கட்டுரையிலே கூறுகிறார்.

1868இல் டென்னிஸன் Henry Longfellow என்ற அமெரிக்கக் கவிஞரை கமெரூனின் ஸ்ரூடியோவிற்கு அழைத்துச்சென்றிருக்கிறார். ”லோங்பெலோ, அவள் என்னென்ன சொல்கிறாளோ அதையெல்லாம் நீ செய்தாக வேண்டும். நான் விரைவில் திரும்பி வருகிறேன். அப்போது உன்னில் என்ன மிச்சமிருக்கிறது என்று பார்த்துக் கொள்கிறேன்” என்று டென்னிஸன் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்.

கூர்ப்புத் தத்துவத்தினை உலகிற்குத் தந்த சார்ள்ஸ் டார்வின், வரலாற்று அறிஞரான தோமஸ் கார்லைல் ஆகிய பிரபலஸ்தர்களும் கமெரூனின் கமெராவிற்குள் சிக்கியிருக்கிறார்கள்.

கமெரூன் எப்போதுமே மனிதர்களைத்தான் கமெராவிற்குள் கொண்டு வந்திருக்கிறார். பெண்கள், சிறுவர், பிரபலங்கள் என்று மனித உருக்களே அவர் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. பைபிள், ஷேக்ஸ்பியர் நாடகங்களிலி



ருந்து கதாபாத்திரங்களைத் தேர்ந்து, அந்த நாடக பாத்திரங்களுக்கேற்ற உடைகளைப் புனைந்து அவர் நிறையப் படங்களை எடுத்திருக்கிறார். அவை பல சமயங்களில் வேண்டுமென்றே out of focus ஆகவும் இருந்துள்ளன. நிலத்தோற்றங்கள் அவை எத்துணை அழகியவையாகத் தோன்றியபோதும், கமெரூன் தனது கமெராவை அவற்றை நோக்கித் தூக்கியதில்லை.

லண்டனில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது கஷ்டம் என்ற நிலை வந்த



போது, 1875இல் சார்ள்ஸ் கமெரூன் இலங்கைக்குத் திரும்பத் தீர்மானித்துவிட்டார். தனது தோட்டங்களைப் பார்க்கவும், தனது மூன்று புதல்வர்களோடு இருக்கவும் என்று கூறி அவர்கள் Dimbola Lodge இற்கு பிரியாவிடை கொடுத்தனர்.

சவப்பெட்டிகளை இலங்கையில் பெற்றுக்கொள்வது கடினம் என்று கருதி, இரண்டு சவப்பெட்டிகளுடன், கூடவே ஒரு பசு மாட்டினையும் கப்பலில் ஏற்றிக்கொண்டு களுத்துறைக்கு வந்துசேர்ந்தனர்.

இலங்கை வந்துசேர்ந்ததும் சார்ள்ஸ் கமெரூன் மிகுந்த உற்சாகம்கொண்டு காணப்பட்டார். நூல்களை வாசிப்பதும் பைரனின் கவிதைகளை உரத்துக்கூவுவதுமாக, வீட்டினைச் சூழ்ந்த தோட்டத்தில், நீண்ட வெள்ளைத் தலைமுடி முதுகில் புரள, தந்தக் கைத்தடியுடன் அவர் மகிழ்ச்சியாக இருந்திருக்கிறார்.

இலங்கையின் ஆளுநராக அவர் வர விரும்பியிருந்தாலும், அவரின் உடல் நிலை அதற்கு இடந்தரவில்லை என்று கூறப்படுகிறது. கண்டிக்கு அருகில் ஹேவஹெட்டவில் Rathoongodde என்ற 320 ஏக்கர் தேயிலைத் தோட்டம் அவருக்கு இருந்தது. களுத்துறையில் அவர் இருந்த வீடு, சிறு மலைக்குன்றில், நதிக்கரை ஓரம் தென்னை, மாமரம், சவுக்குமரம், ஈரப்பலா மரங்கள் சூழ அமைந்திருந்தது. மைனாக்கள் அச்சமின்றி வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பறந்து திரிந்து கொண்டிருந்தன.

இலங்கை வாழ்வில் இவர்களிடம் வந்த ஒரேயோர் ஐரோப்பிய ஓவியப் பெண்மணியான Marianne North, இவர்களின் வீட்டில் இருந்து, தண்ணீர்க் குடத்தைத் தோளில் சுமந்தவண்ணம் வெற்றுமேனியுடன் சிறுவன் ஒருவன் நின்றுகொண்டிருப்பதை ஓவியமாகத் தீட்டுவதை, கமெரூன் தனது கமெராவில் கிளிக் பண்ணியிருக்கிறார்.

மலைநாட்டில் கமெரூன் வாழ்ந்த காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள், தோட்டத்துப் பெண்கள், தங்களின் தோட்ட பங்களா என்று, எடுத்த புகைப்படங்கள் நமக்கு முக்கிய ஆவணங்களாகக் கிடைக்கின்றன. கதிர்காமத்திற்குச் செல்வதுபோல் காணப்படும் கமெரூனின் ஒரு புகைப்படத்தில் ஒன்பது பேர் காணப்படுகின்றனர். ஒருவர் படியில் உட்கார்ந்திருக்க, அவரின் மடியில் ஒரு சிறுவன் உறங்கியவண்ணம் காணப்படுகிறான். கையில் பறையை ஏந்தியவாறு ஒருவர் நின்றுகொண்டிருக்கிறார். காட்டுவழியே போகும்போது வனவிலங்குகளை விரட்டுவதற்கு இந்தப் பறை அவர்களுக்கு உதவியிருக்கக் கூடும். ஏனைய ஆண்கள் தங்கள் தலைகளில் மாலைகள் சுற்றிய செம்புகளைச் சுமந்த வாறு நிற்கின்றனர். நல்ல வெள்ளை வேஷ்டி, சட்டைகளுடன் தலையில் உருமா கட்டியவாறு அவர்கள் காணப்படுகின்றனர். கமெராவை கமெரூன் தரையை ஒட்டி வைத்திருக்க வேண்டும். படத்தில் உள்ளவர்கள் ஒரே இடத்தை நோக்கிப் பார்வையைச் செலுத்துவதற்காக அவர் இந்த யுக்தியைக் கையாண்டிருக்கவேண்டும்.

கமெரூனின் புகைப்படங்கள் எவ்வளவுதூரம் காலனித்துவ மேலாண்மையை

(மறுபக்கம் பார்க்க)

# புலனாய்வு எச்சரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாதது ஏன்?

நமது கொழும்பு செய்தியாளர் சேகு



**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலும் நடத்தப்படவிருக்கும் இடங்கள் மற்றும் நபர்கள் தொடர்பிலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை ஆணைக்குழுவின் அறிக்கை புலப்படுத்துகின்றது**

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு வின் அறிக்கை வெளியாகியுள்ளது. இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் தொடர்பில் இந்த அறிக்கையின் உட்பக்கத்தில் வெளியாகியுள்ள சில விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

**பாகிஸ்தான் அதிகாரிகளால் வழங்கப்பட்ட தகவல்கள்**

2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி பாகிஸ்தான் அதிகாரிகளால் இலங்கை பிரஜை ஒருவர் தொடர்பான முக்கியமான தகவல்கள் பல வழங்கப்பட்டுள்ளன. அதுவும் பாகிஸ்தான், இஸ்லாமாபாதிலிருந்த இலங்கை தூதுவருக்கு இந்த விடயங்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் சர்வதேச தொடர்பை பேணிவருவதாகவும், வெடிபொருளொன்றை தயார் செய்து வருவதுமான தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தகவலின்படி சந்தேகநபர் பயன்படுத்தவுள்ள வெடிபொருட்கள் தொடர்பான விபரங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ள அதேவேளை, ஆயுதப்பயிற்சி அளிக்கப்பட்டு வருவதான விடயங்களும் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

இந்தத் தகவல் இலங்கையின் பாதுகாப்பு தரப்பிற்கு வழங்கப்படாமை தொடர்பில் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது. மேலும் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பரிந்துரைத்துள்ளது.

**ஆமி மொஹல்தீன் மற்றும் ரில்வான்**

கடந்த 2019 மார் மாதம் அரச புலனாய்வுதுறை பரிசோதனை அதிகாரிகள் ஆமி மொஹல்தீன் மறைந்திரக்கும், இடம் மற்றும் ரில்வான் அடிக்கடி வந்து போகும் இடம் ஆகியவற்றை தெரியப் படுத்தியிருந்தனர். அலியார் சந்தியில், இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் ரில்வானுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணை தொடர்பில், இரகசிய பொலிஸார் அறிந்திருந்தனர். இருப்பினும் அவரை கைது செய்வதை தவிர்த்து சஹ்ரான் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். அதற்காகாக, இரகசிய பொலிசார் ஒருவரின் தொலைபேசி, இலக்கத்தையும் வழங்கியிருந்தனர்.

அத்துடன், ரில்வான் இருக்கும் இடம் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு இரகசிய பொலிஸார் எந்த ஆதாரங்களையும் வழங்கவில்லை.

**இந்திய புலனாய்வு துறை தகவல்**

சஹ்ரான் மற்றும் அவருடைய குழுவினரால் மேற்கொள்ளப்படவிருந்த தாக்குதல் தொடர்பில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி அரச புலனாய்வு துறையின் பணிப்பாளர் நிலந்த ஜெயவர்த்தனவிற்கு மிக தெளிவாக பெறுமதிவாய்ந்த தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்நிலையில் அரச புலனாய்வு துறை பணிப்பாளரின் கருத்தின் படி அந்த தகவலை அவர் ஒரு புலனாய்வு தகவலாக கருதாமை வெளிப் படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தகவல்களை அறிந்திருந்த போதிலும் அதற்குரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைககளை எடுக்கவில்லை என்பதே முதல் குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவில் அவதானம் செலத்தப்பட்டது.

அரச புலனாய்வுத் துறையின் பணிப்பாளருக்கு இந்த தாக்குதல் தொடர்பிலான தகவல்கள் வெளிநாடுகளின் புலனாய்வுத் துறை அதிகாரிகள் மற்றும் சக அதிகாரிகளினால் வழங்கப் பட்டு ஆரம்ப அபாய எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஆணைக்குழு நுணுக்கமான முறையில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 திகதி அரச புலனாய்வு துறைப் பணிப்பாளருக்கு இந்திய புலனாய்வுத் துறையினால் வட்ஸ் அப் குறுஞ்செய்தி கிடைக்கப்பெற்றுள்ளது.

அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

இலங்கை தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பின் சஹ்ரான் ஹாசிம் மற்றும் அவரை சார்ந்தோர் அண்மையில் இலங்கையில் தற்கொலை குண்டுத்தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளனர். அதற்காக முக்கியத்துவம் வாய்ந்த தேவாலயங்கள் சிலவற்றை அவர்கள் தெரிவு செய்துள்ளனர். அவர்கள் இலங்கையின் இந்திய தூதரகத்தை உளவு பார்த்துள்ளதுடன், தூதரகமும் இலக்கு வைக்ககப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த தகவலுக்கு அமைய பயங்கரவாதி இந்த இடங்களில் எவற்றிலும் தாக்குதலை நடத்தலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அ. தற்கொலை குண்டுத் தாக்குதல்கள்
ஆ. ஆயுதத் தாக்குதல்
இ. ட்ரக் ரக வாகனத் தாக்குதல்

என்பன இவற்றுள் அடங்கும் என்பதுடன் தாக்குதலை நடத்த இருக்கும் நபர்களின் பெயர்களும் வெளியிடப் பட்டுள்ளது.

அந்த பெயர்கள் வருமாறு,

சஹ்ரான் ஹாசீம், ஜல் அல் கிதல், ரில்வான், சஜீட் மௌலவி, ஹாஹிட், மில்ஹான் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தகவலை வெளிப்படுத்துவதற்கும், தகவல்களுக்கான பதிலை அளிப்பீர்கள் எனவும் நம்புகின்றோம். என குறிப்பிடப்பட்டிருந்துள்ளது.

மேலும், உளவுத்துறை தகவல்கள் என்று நோக்கும் போது தகவலுக்கும் உளவுத்தகவலுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. இந்நிலையில் ஏப்ரல் நான்காம் திகதி கிடைக்கப்பெற்ற உளவுத் தகவல் தொடர்பில் 5 டபிள்யு. எச் முறைமையை உபயோகப்படுத்தி பார்க்கும் பொழுது அந்த தகவல் மிகவும் உயர் மட்ட உண்மைத்தன்மை வாய்ந்த தகவலாக காணப்பட்டுள்ளது.

அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் நிலந்த ஜெயவர்த்தன அது தகவலொன்றே என்ற நிலைப்பாட்டிலேயே உறுதியாக இருந்துள்ளார். இருப்பினும் விசாரணை ஆணைக்குழு மேலும் சில புலனாய்வு அதிகாரிகளிடம் மேற் கொண்ட விசாரணைகளுக்கு அமைய குறித்த தகவல் உறுதியான புலனாய்வு தகவல் என்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ளது.

சாதாரணமாக நோக்கும் போது, புலனாய்வு துறைக்கு பிறிதொரு நாட்டினுடைய புலனாய்வு தகவல் கிடைக் கப்பெறும் பட்சத்தில் அந்த தகவலின் நம்பகத்தன்மை தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் இணைந்து பரிசோதனையொன்றை முன்னெடுக்க வேண்டும். அதனை தான் முன்னெடுத்ததாகவும், இந்தியா வழங்கிய குறித்த தகவல் தொடர்பில் அவர்களுக்கே நம்பகத்தன்மை இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், புலனாய்வு துறையினுடைய பணிப்பாளர் தன்னுடைய வெளிநாட்டு நண்பரான புலனாய்வு அதிகாரியுடன் கலந்தரையாடியதற்கான எந்த சாட்சியங்களோ, ஆதாரங்களோ புலனாய்வு துறையில் இல்லையென்பது ஆச்சரியமளிக்கும் வகையில் அமைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி இந்திய புலனாய்வுத் துறை அதிகாரி வழங்கிய தகவலோ இது தொடர்பில் இடம் பெற்ற கலந்துரையாடல்களோ ஆணைக்குழு கோரிய போது புலனாய்வுத் துறையிடம் இருக்கவில்லை.

ஆகவே, அரச புலனாய்வுத் துறையின் பணிப்பாளருக்கு இந்திய புலனாய்வு அதிகாரியான அவருடைய நண்பருக்கும் இடையில் எந்த கலந்துரையாடல்களும் இது தொடர்பில் இடம் பெறவில்லை என்ற நிலைப்பாட்டிற்கு ஆணைக்குழு வந்துள்ளது. 21 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னர் நடத்தப்படவிருந்த தாக்குதல் தொடர்பில் அவருடைய முதலாவது நண்பர் இரண்டாவது தடவையும் தகவல் வழங்கியுள்ளார். அதனை தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி தகவல் கிடைக்கப்பெற்றதா என வினவிய போது வழங்கப்பட்ட பதிலின் ஊடாக அந்த விடயம் தெளிவாகின்றது.

அந்த தகவலில் இருந்த விடயம் வருமாறு:

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி சஹ்ரான் ஹாசிம் நடாத்தவிருந்த தாக்குதல் தொடர்பில் இந்தியா எமது நாட்டின் மீதான அக்கறையில் வழங்கிய தகவலை நான் கூறுகின்றேன். கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்த விவகாரம் தொடர்பான அறிக்கை எமக்கு கிடைக்கப்பெற்றிருந்தது. இதில் தகவல் வழங்கிய தரப்பினரால் கால எல்லை குறிப்பிடப்பட்டுள்ளதுடன், காத்தான் குடியில் இதற்கு முன்னர் பயிற்சி மேற்கொள்ளாப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. என்ற தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தகவல்களின் பிரகாரம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலும் நடத்தப்படவிருக்கும் இடங்கள் மற்றும் நபர்கள் தொடர்பிலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்காமையே இதன் ஊடாக புலப்படுகின்றது. ●

# புகைப்படக்கலையின் முன்னோடி...

வெளிப்படுத்துகிறது என்பது குறித்துப் பெருமளவில் ஆய்வுக் கட்டு ரைகள் வெளிவந்துள்ளன. லண்டனிலும் அமெரிக்காவிலும் அவரது புகைப் படங்கள் காட்சிக்கு வைத்துப் பேணப் பட்டு வருகின்றன.

ஜூலியா மார்கரெட் கமெரூன் 1979 ஆம் ஆண்டு, தனது 64ஆவது வயதில் Glenairn Estate இல் மரணமுற்றார். அங்கிருந்து அவரது உடலை தோட்டத் தொழிலாளர்கள் தாங்களே சுமந்து, பின் மாட்டுவண்டியில் ஏற்றி, 16 மைல்கள் கொண்டுசென்று, பொகவந்தலாவை சென். மேரிஸ் அங்கிலிக்கன் தேவாலயத்தில் அவரது இறுதிக்கிரியைகள் நிகழ்த் தப்பட்டன. அதற்கு அடுத்த ஆண்டிலேயே அவரது கணவர் சார்ள்ஸ் கமெரூனும் மறைய, இருவரது கல்லறைகளும் அடுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

மலையகத் தொழிலாளர்களைப் புகைப்படத்தில் எடுத்த முதல் பிரித்தானியப் பெண்ணாக ஜூலியா மார்கரெட் கமெரூன் திகழ்கிறார். ●

# புலமைச் சிகரம் 11


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**கேள்விகள் பயிற்சி செய்வதற்கு**

01.C. குறித்த உருவை துண்டுகளாக்கிய பின்னர்அவற்றை மீளப் பொருத்துவதற்கு பொருத்தமான உருக்களை தெரிவு செய்தல்.


**2012 (32)**

* தரப்பட்டுள்ள வடிவங்களில் சேர்த்து ஒரு செவ்வகத்தை அமைக்கலாம். அவ் வடிவங்கள் யாவை?




**2019 (15)**


* உருவில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.





01D. குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தல் அல்லது அக் கோலத்திற்கு அடுத்த உருவைக் கண்டறிதல் அல்லது கூடுகளினுள்ளே இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல்.

**2009 (09),10**

* கூடுகளினுள்ளே பந்துகள் இடப்பட்டுள்ள விதத்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க




*





**2010 (03,04)**

* ஒரே கூட்டத்தை சேர்ந்த பொருள்கள் இடம்பெறும் அமைப்பைத் தெரிவு செய்க.

3.

4.




**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# ரஞ்சனுடன் ராஜகருணா 'செல்பி'; சிறை அதிகாரி பணி நிறுத்தம்!

கொழும்பு, மார்ச்.11

**அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் சிறைவைக் கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன், பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா செல்பி எடுத் தமை தொடர்பில், அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் பிரதான அதிகாரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.**

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பந் தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக அரச கட்டமைப்புக்கு தெரிவிக்கப்பட் டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட கைதி தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

மிகவும் பாதுகாப்பான அங்குணு கொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் பாரா ளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்க சிறைவைக்கப்பட்டுள்ளார் அத்துடன், அவர் அங்கு தனியான அறை ஒன்றுக் குள் மிகவும் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளார்.

எனினும் சிலர் அது தொடர்பில் பல் வேறு விமர்சனங்களை முன்வைத்து வந்தனர். இந்நிலையில் அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சிறைக் கைதியான ரஞ்சன் ராமநாயக்கவை பார்ப் பதற்காக சென்றிருந்ததுடன், இதன்போது அவருடன் 'செல்பி' எடுத்து சமூகவலைத் தளத்திலும் வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் விசாரணைகளை முன் னெடுத்து வருவதுடன், இந்தச் சம்பவம் தொடர்பில் அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் பிரதான சிறை அதிகா ரியை பணி இடைநிறுத்தம் செய்துள்ளது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பி னர்களுக்கான சிறப்புரிமைகளுக்கமைய கைதிகளை பார்வையிடுவதற்காக சிறைச் சாலைகளில் அனுமதி வழங்கப்படும். எனினும் அவர்களை சோதனைச் செய்த தன் பின்னரே சிறைச்சாலைக்குள் செல்வ தற்கு அனுமதி வழங்கப்படும். இவ்வாறு சோதனை செய்வதற்காக சிறைச்சாலை களில் பொலிஸ் விசேட அதிரடிப்படையி னர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர்.

அதற்கமைய குறித்த பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்த தொலைபேசியை அவர் , சோதனை அதிகாரிகளுக்கு வழங் காமல் எடுத்துச் சென்றுள்ளதுடன், சிறைக்கைதியான ரஞ்சன் ராமநாக்க வுடன் இணைந்து புகைப்படம் எடுத் துள்ளார்.

அதன்காரணமாக இது தொடர்பில் நாம் விடயப் பொறுப்பு அமைச்சர்க ளுக்கு தெரிவித்துள்ளோம். இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பில் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதேவேளை , சிறைக்கைதியான ரஞ்சன் ராமநாயக்க தொடர்பிலும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் , விசாரணைகளின் பின்னர் அவரை தனியான சிறையில் வைப்பது டன், உறவினர்கள் பார்ப்பதற்கான அனுமதியை இரத்து செய்யவும் வாய்ப் புள்ளது- என்றார். (எ)

## 1000 ரூபா சம்பள அதிகரிப்பு குறித்த வர்த்தமானி வெளியீடு!

கொழும்பு, மார்ச்.11

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாவாக நிர்ணயித்து வர்த்த மானி வெளியிடப்பட்டுள்ளது.

தேயிலை மற்றும் இறப்பர் சார் தொழிலாளர் களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாவாக நிர்ண யித்தே குறித்த வர்த்தமானி தொழில் அமைச்சரின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானமானது மார்ச் மாதம் 5 ஆம் திகதி முதல் செல்லுபடியாக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, குறைந்தபட்ச நாளாந்த சம்பளமாக 900 ரூபா வரவு - செலவுத் திட்ட சலுகைக் கொடுப்பனவாக 100 ரூபாவும் சேர்த்து நாளாந்த சம்பளம் 1000 ரூபாவாக அதி கரிக்கப்பட்டுள்ளது. (எ)

## விளையாட்டு சங்கங்களுக்கான தேர்தல் விரைவில்

கொழும்பு, மார்ச்.11

விளையாட்டு சங்கங்களுக் கான அலுவலர்களுக்கான தேர் தல் விரைவில் நடத்தப்படும் என்று விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய தெரிவித்தார்.

4 விளையாட்டு சங்கங்க ளின் தேர்தல்களை நடத்துவது குறித்து விசேட கலந்துரையா டல் நடத்தப்பட்டுள்ளது என் றும் அவர் குறிப்பிட்டார். (எ)

## மாத்தறையில் 68 கிலோ கிராம் ஹெரோயினுடன் இருவர் கைது

மாத்தறை, மார்ச்.11

மாத்தறை, தியந்தர பகுதியில் 68 கிலோ கிராம் ஹெரோயினுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேக நபர்கள் பயணித்த காரொன்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப் பட்டது என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் நீர் கொழும்பு, கட்டான பகுதியைச் சேர்ந்த 32 வயது ஆண்ணொருவரும், கண்டி பகுதியைச் சேர்ந்த 38 வயது பெண்ணொருவரும் ஆவர். (எ)

## கொரோனா தொற்றால் 19 வயது யுவதி மரணம்

கொழும்பு, மார்ச்11

கொரோனா வைரஸ் தொற் றால் 19 வயது யுவதியொருவர் உயிரிழந்தார்.

ஹெம்மாத்தகம பிரதே சத்தை சேர்ந்த இந்த யுவதி கண்டி பொது வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 6 ஆம் திகதி உயிரிழந்தார்.

கொரோனா நிமோனியா மற்றும் மூளையில் ஏற்பட்ட கட்டி என்பன இவரது உயிரி ழப்புக்கான காரணமாகும் என்று சுகாதார சேவைகள் பணிப்பா ளர் நாயகம் தெரிவித்தார். (எ)

# பெண்களை இழிவாக நடத்தும் ஊடகங்கள்;

## பெண் எம்.பிக்கள் சபையில் ஆதங்கம்







கொழும்பு, மார்ச் 11

**பாடல்களிலும், கவிதைகளில் மாத்திரம் பெண்களைப் போற்றிப் புகழ்ந்து பாடினாலும், பெண்களை இழிவான நிலையில் நடத்தும் சமூகமே காணப் படுகின்றது. தலைமை பொறுப்புக்களை வழங்கும் வேளையில் பாலினம் குறித்து கவனம் செலுத்துவது வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும் என பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும், எதிர்க்கட்சி பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் தமது வேதனையை வெளிப்படுத்தினர்.**

ஊடகங்களே இன்று பெண்களை மிக இழிவாக நடத்துவதாகவும் அவர்கள் குற்றம்சுமத்தினர்.

ஆண் - பெண் சமநிலை தொடர்பிலான பாராளுமன்ற பெண்கள் தெரிவுக்குழு அமைப்பது தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி குமாரி விஜயரத்ன கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றும் போதே இந்த கருத்துக்களை இவர்கள் முன்வைத்தனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி குமாரி விஜயரத்ன:-

பெண்களுக்கு எதிரான வன்முறைகள், அவதூறு செயல்பாடுகள் நாட்டில் அதிகரித்துள்ளன, நாட்டின் கல்வித்துறையில் பெண்களின் மட்டம் உயர்வாக இருந்தாலும் கூட உயரிய பணிகளில் அவர்களை நியமிக்க தயக்கம் காட்டுகின்றனர்.

காரணம் என்னவெனின் அவர்களுக்கு மகப்பேற்று விடுமுறை வழங்க வேண்டும் என்ற பிரதான காரணமாகும். ஆனால், கூலி வேலைகளில் பெண்களை இணைத்துக்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

குறைந்த கொடுப்பனவில் அதிக பணிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்பதே இதன் நோக்கமாகும். பாடல்களில், கவிதைகளில் பெண்களைப் போற்றிப் புகழ்ந்து பாடினாலும் உண்மையில் பெண்களை இழிவான நிலையில் நடத்தும் சூழலே காணப்படுகின்றது- என்றார்.

விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் தலதா அத்துகோரள: மார்ச் 8 ஆம் திகதி மட்டுப்படுத்தப்பட்ட பெண்கள் தினத்தை கொண்டாடுகின்றனர்.

அன்றைய தினத்தில் மட்டும் பெண்கள் உரிமை, சுதந்திரம் பற்றிப் பேசிவிட்டு ஒரு நிகழ்ச்சியாக அடையாளப்படுத்துகின்றனர். பெண்கள் தினத்தில் மட்டும் பெண்கள் பெருமையை பேசுவார்கள். நாமே உலகிற்கு முதல் பெண் பிரதமரை உருவாக்கினோம், ஜனாதிபதியை உருவாக்கினோம் எனப் புகழ் பாடுவார்கள். ஆனால், ஏனைய தினங்களில் பெண்களே அதிகமாக ஒடுக்கப்படுகின்றனர். இந்த நாட்டின் பொருளாதரத்தில் பெண்களே பாரிய பங்களிப்பைச் செய்கின்றனர். வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்கள், தோட்டத் தொழிலாளர்கள் எவரையும் நாம் முறையாக பாதுகாக்கவில்லை.

அதுமட்டுமல்ல ஊடகங்கள் மிக மோசமாக பெண்களை அவமதித்து வருகின்றன. மிகக் கீழ்த்தரமாக பெண்களை விமர்சிக்கும் நடவடிக்கைகளை ஊடகங்கள் முன்னெடுக்கின்றன. தலை கிடைத்து விட்டதா? என்பதே இன்று நாட்டில் பிரதான கதையாக உள்ளது.

நாட்டில் உள்ள பிரதான பிரச்னை ஒரு பெண்ணின் தலையா? என்ற கேள்வி எழுகின்றது. நாட்டுக்காக தியாகம் செய்யும் தோட்டத் தொழிலாளர் பெண்கள், வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே:

இந்த நாட்டில் வரலாறு முழுவதும் போராடியே பெண்களின் உரிமைகளை பெற்றுக் கொள்ள நேர்ந்துள்ளது. நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்று வரை 5 வீதமான பெண் பிரதிநிதித்துவமே பாராளுமன்றத்தில் உள்ளது.

பெண்களின் குரலை மட்டுப்படுத்தும் செயல்பாடுகளையே சகல அரசாங்கங்களும் முன்னெடுத்துள்ளன. அதுமட்டுமல்ல 90 வீதமான பெண்கள் பொதுப் போக்குவரத்தில் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆய்வொன்றில் கூறப்பட்டுள்ளது. பெண்கள் குறித்த சிந்தனையில் நாம் இன்னமும் கற்காலத்தில் உள்ளோம் என்றே கூற வேண்டும்.

பெண்களின் தகுதி, தலைமைத்துவம் மழுங்கடிக்கப்படும் நிலைமையே இன்றும் காணப் படுகின்றது. பெண்களை இன்று பாலியல் பொருள்களாகப் பாவிக்கும் நிலைமைகளே காணப்படுகின்றன.

ஊடகங்கள் பெண்களை மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளன. சமூக ஊடகங்களிலும் அவ்வாறான செயல்பாடுகளே காணப்படுகின்றன. இவற்றிலிருந்து விடுபடும் நிலைமை உருவாக வேண்டும். பெண்கள் என்பதற்காக சகல பொறுப்புக்களிலிருந்தும் நிராகரிக்கப்படும் மனநிலையிலிருந்து சமூகம் மாற வேண்டும் என்றார். (எ)

## இனங்களுக்கிடையில் வெறுப்புணர்வு படங்கள் பதிவேற்றியவர் கைதானார்!

கொழும்பு, மார்ச்.11

இனங்களுக்கிடையில் கருத்து மோதல் ஏற்படும் விதத்தில் வெறுப்புணர்வை தூண்டும் விதமாக முகப்புத்தக சமூக வலைத்தளத்தில் படங்களை பதிவேற்றிய ஒருவரை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

மாத்தளை - யட்டவத்த பகுதியில் வைத்து இந்த சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு விஷேட பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

53 வயதுடைய குறித்த நபர் கடந்த மார்ச் 4 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாள்களில் இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் முகப்புத்தகத்தில் படங்களைப் பதிவிட்டுள்ளார்.

சந்தேகநபர் ஏப்ரல் 21 தாக்குதல்தாரிகளின் படங்களுடன் மேலும் சிலரின் படங்களை உள்ளடக்கி இனங்களுக்கு இடையில் முரண்பாட்டையும் வெறுப்புணர்வையும் தூண்டும் விதத்தில் படங்களை பதிவேற்றியுள்ளார் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சந்தேக நபருக்கு எதிராக தண்டனை சட்டக் கோவையின் 120 ஆம் அத்தியாயத்தின் கீழும், கணனிக் குற்றங்கள் தொடர்பிலான சட்டத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் கீழும் விஷேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சந்தேக நபர் கொழும்பு கோட்டையிலுள்ள சி.ஐ.டி. தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (எ)

## போதைப்பொருள்கள், 38 துப்பாக்கிகளுடன் கொழும்பில் ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மார்ச்.11

கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் 38 கைத்துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 34 வயதுடையவர் என்றும் அவரிடமிருந்து 2 கிராம் ஹெரோயினும், 18 கிராம் ஐஸ் மற்றும் 10 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (எ)


# மரண அறிவித்தல்

மலர்வு 02 . 11 . 1968



உதிர்வு 08 . 03 . 2021

## ஞானசேகரம் சாமுவெல் நேசக்குமார்

**Old Boy of St. John's College, Jaffna**
**Business Development Manager – North & East, Cargills (Ceylon) PLC**

ஞானசேகரம் சாமுவெல் நேசக்குமார் கடந்த 08.03.2021 திங்கட்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் வஜிராவின் அன்புக் கணவரும் எபநேசர், ஹெப்சியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலம்சென்றவர்களான அல்பேட், கத்தலீன் ஞானசேகரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற உபாலி அதிகாரி, சர்தா அழகக்கோன் தம்பதிகளின் மருமகனும், றஞ்சித்குமார் (USA), ஞானகுமார் (Canada), ஜோய்ஸ் (Dubai),பேழ் (Malaysia), செல்வகுமார் (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நளினி (USA), சாந்தம் (Canada), Dr.மகேந்திரன் (Dubai), டேற்ரம் (Malaysia) காலஞ்சென்ற றுசிற்றா, சனத், ஜயம்பதி, லலித், பிரசாத் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (10.03.2021) புதன்கிழமை காலை 9 மணி முதல் Borella ஜெயரத்ன மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 3 மணியளவில் இறுதி ஆராதனையின் பின்னர் Borella கனத்தை, பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| இலங்கை | - | 077 849 9212 |
| கனடா | - | +1 416 269 8793 |
| டுபாய் | - | +97 150 659 5193 |
| மலேசியா | - | +60 143 341 001 |
| அமெரிக்கா | - | +1 614 459 9326 |

தகவல்:
குடும்பத்தினர்.



# பாரிஸ் தேவாலயக் கூரைக்கு ஆயிரம் ஓக் மரங்கள் தெரிவு!

பாரிஸ், மார்ச் 11

பாரிஸ் நகரின் புகழ் பெற்ற நொர்த் - டாம் மாதா கோவிலின் கோபுரக் கூரையை மீள நிறுவுவதற்காக ஆயிரம் ஓக் மரங்கள் (oaks) தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பல மரங்கள் நூறாண்டுகள் பழமை வாய்ந்த முதிர்ந்த மரங்கள் ஆகும். இவை தமிழில் சீமை ஆலமரங்கள் என அழைக்கப்படுகின்றன.

பிரான்ஸின் சகல பிராந்தியங்களிலும் உள்ள வனங்களில் இருந்து மரங்களை வழங்குவதற்குத் தனியார் வனவள உரிமையாளர்கள் பெரிதும் ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. “தங்கள் வாழ்நாளில் கிடைக்கமுடியாத அரியதோர் வரலாற்றுச் சந்தர்ப்பம் இது” என்று மரங்களை வழங்கு வோர் அதனைப் பெருமைப்படுத்திக் குறிப்பிட்டுள்ளனர்.

சுமார் இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த எட்டு மரங்கள் சார்த் என்ற இடத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மரங்களைத் தறிக்கும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

உயர்ந்த கூம்பு வடிவக் கூரையின் தீராந்திகள் முதல் சட்டப் பலகைகள் வரை முழுவதும் ஓக் மரங்களால் மட்டுமே வடிவமைக்கப்படவுள்ளன.

பாரிஸ் நகரின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக நகர மையத்தில் நிமிர்ந்து நின்றிருந்த பெருமைக்குரிய - 93 மீற்றர் உயரம் கொண்ட - தேவாலயக் கூரையை இரண்டாண்டுகளுக்கு முன்னர் தீ முற்றாக விழுங்கியது. முழுவதும் ஓக் மரங்களால் வடிவமைக்கப்பட்டிருந்த 12ஆம் நூற்றாண்டுகாலக் கலை வடிவக் கூரை 2019 ஏப்ரலில் நிகழ்ந்த பெருந் தீ அனர்த்தத்தினால் முற்றாக எரிந்து அழிந்தது.

கோபுரக் கூரை 2024 ஏப்ரல் மாதத்துக்கு முன்னராக அதன் முந்திய வடிவத்திலேயே முழுவதும் மரங்களால் மீள நிர்மாணிக்கப்படும் என்று ஜனாதிபதி மக்ரோன் உறுதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 14 வயது சிறுமி சக மாணவர்களால் நதியில் தள்ளிக் கொல்லப்பட்டார்!

## பிரான்ஸில் சம்பவம்

பாரிஸ், மார்ச் 11

14 வயது பள்ளி மாணவி ஒருத்தி சக மாணவன், மாணவி இருவரால் தாக்கப்பட்டு சென் நதியில் தள்ளி வீழ்த்திக் கொல்லப்பட்டிருக்கிறார்.

பிரான்ஸின் தலைநகர் பாரிஸ் நகருக்கு அருகே ஆர்ஜொந்தை என்னும் பகுதியில் நேற்று முன்திம் இரவு ஊரடங்கு நேரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

ஊடகங்கள் வெளியிட்டிருக்கும் தகவல்களின்படி பள்ளியில் இடம்பெற்ற துன்புறுத்தல்களின் தொடர்ச்சியாகவே அந்த மாணவி பலியானார் என்பது தெரிய வருகிறது.

ஆர்ஜொந்தையில் அமைந்துள்ள தொழில் பள்ளியில் பயிலும் மாணவியை 15 வயதான சக மாணவன் ஒருவனும் மற்றொரு மாணவியும் இணைந்தே தாக்கி நதியில் தள்ளி உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

மாணவியை ஆற்றில் தள்ளிய தகவலை வீட்டில் தனது தாயாரிடம் கூறிவிட்டு சக மாணவியையும் அழைத்துக் கொண்டு தலைமறைவாகிய மாணவனை பொலிஸார் நேற்று கைது செய்தனர். (ஐ)

# உலகில் மூன்றில் ஒரு பெண் வன்முறைக்கு இலக்காகிறார்!

## உலக சுகாதார ஸ்தாபனம் அதிர்ச்சி தகவல்

ஜெனிவா, மார்ச் 11

உலகம் முழுவதும் உள்ள பெண்களில் மூன்றில் ஒருவர் தமது வாழ்நாளில் உடல் அல்லது பாலியல் ரீதியான வன்முறைக்கு ஆளாகின்றனர் என்ற அதிர்ச்சித் தகவலை உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்விலேயே இந்த விடயம் வெளிவந்துள்ளது. மேலும் அந்த ஆய்வில்,

20 வயது நிறைவடையும் முன்னரே தங்களுக்கு நெருக்கமான உறவுகளால் பெண்கள் பாலியல் ரீதியான வன்முறைகளை அனுபவிக்க நேரிடுகிறது என்றும் தெரிய வந்துள்ளது.

உலக அளவில் 85 கோடியே 20 இலட்சம் பெண்கள் 15 வயது முதலே பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். கிரிபாட்டி, பிஜி, பப்புவா நியூகினி, பங்களாதேஷ், கொங்கோ குடியரசு, ஆப்கானிஸ்தான், உகாண்டா மற்றும் பொலிவியா போன்ற நாடுகளிலேயே பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகளவில் காணப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், கொரோனா தொற்று நெருக்கடி காலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. தொற்று நோய் நெருக்கடியின் போது அரசாங்கங்கள் பிறப்பித்த ஊரடங்கு உத்தரவால் குடும்ப வன்முறைகள் மிகப்பெருமளவில் அதிகரித்தன.

ஆசியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் 15 - 49 வயது பெண்கள் தங்கள் இணையால் அதிகளவில் வன்முறைகளுக்கு உட்பட்டுள்ளனர். குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களை சேர்ந்த பெண்களே அதிகளவில் வன்முறைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். அத்துடன், சில நாடுகளில் ஒட்டுமொத்த பெண்களில் 50 வீதமானவர்கள் பாலியல் வன்முறை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றும் ஆய்வில் அறிய வந்துள்ளது. (ஐ)

# பர்தா ஆடைக்கு சுவிஸ்ஸும் தடை!

முகத்தை மறைக்கும் பர்தா ஆடைகளை பொது இடங்களில் அணிய சுவிற்சர்லாந்தும் தடைவிதித்துள்ளது. இந்தச் சட்டத்துக்கு சுவிஸ் மக்களும் ஆதரவு அளித்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் முகத்தை மறைக்கும் பர்தா ஆடைகளுக்கு சில ஆண்டுகளுக்கு முன் னரே தடை விதிக்கப்பட்டன. ஆனால், சுவிஸ் அரசு இந்தச் சட்டத்துக்கு மறுப்புத் தெரிவித்து விட்டது. இது தொடர் பில் பல விவாதங்கள் எழுந்த சூழ்நிலையில் இந்தச் சட்டம் பொது மக்களின் வாக்கெடுப் புக்கு விடப்பட்டது. இதில், 14 இலட்சத்து 26 ஆயிரத்து 992 பேர் இந்த ஆடைகளுக்கு தடை விதிக்க ஆதரவாக வாக்களித்தனர். எதிராக 13 இலட்சத்து 59 ஆயிரத்து 621 பேர் வாக்களித்தனர்.

இதைத் தொடர்ந்து விரைவில் முகத்தை மறைக்கும் பர்தா உள்ளிட்ட ஆடைகளுக்கு தடை விதிக்கும் சட்டம் விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளது. (ஐ)

# மகளிர் தின பேரணியில் வெடித்தது வன்முறை!

## மெக்சிக்கோவில் 81 பெண்கள் காயம்

மெக்சிக்கோசிற்றி, மார்ச் 11

மெக்சிக்கோவில் பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மகளிர் தினத்தன்று பேரணி நடந்தது. இந்தப் பேரணியில் வெடித்த வன்முறையால் 81 பெண்கள் படுகாயம் மற்றும் காயங்களுக்கு உள்ளாகினர்.

தலைநகரான மெக்சிக்கோ சிற்றியில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்றனர். இந்தப் பேரணி ஜனாதிபதி மாளிகையை நோக்கிச் சென்றது.

இதனிடையே, போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழையாதவாறு பொலிஸார் இரும்பு சுவர் அமைத்திருந்தனர். அத்துடன் பாதுகாப்பு பணியில் பெண் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

நகர்ந்த பேரணி, இரும்பு சுவரை உடைக்க முயன்றது. இதைப் பொலிஸார் தடுக்க முயன்றனர். இதனால், இரு தரப்பினரிடையேயும் வன்முறை பெருக ஆரம்பித்தது.

இதில், 62 பெண் பொலிஸாரும், பேரணி தரப்பில் 19 பெண்களும் காயங்களுக்கு உள்ளாகினர். இவர்கள் அனைவரும் அருகிலுள்ள அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# “அந்தக் குழந்தைகளுக்குப் பதிலாக என் உயிரை எடுத்துகொள்ளுங்கள்”

## போராட்ட களத்தில் மண்டியிட்டுக் கேட்டு நெகிழ வைத்த அருட்சகோதரி!



யங்கூன், மார்ச் 11

“அந்தக் குழந்தைகளை (போராட்டக்காரர்கள்) விட்டுவிடுங்கள். என் உயிரை எடுத்துக் கொள்ளுங்கள்”, என்று பொலிஸாரிடம் மண்டியிட்டு கேட்ட அருட்சகோதரியின் ஒளிப்படம் சமூகவலைத்தளங்களில் பிரபலமாகி வருகின்றது.

மியன்மாரின் ஆட்சியை கடந்த பெப்ரவரி முதலாம் திகதி இராணுவம் கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து, மீண்டும் ஜனநாயக ஆட்சியை வலியுறுத்தி ஜனநாயக ஆதரவாளர்களால் நாடு முழுவதும் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இந்நிலையில் போராட்டங்களை அடக்க இராணுவ ஆட்சிப் பீடம் வன்முறைகளை பிரயோகித்து வருகின்றது. இதனால், 50இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனாலும், போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

இந்நிலையில், மைகிட்னா நகரிலும் இராணுவத்துக்கு எதிராகப் போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன. இதன்போது போராட்டகளத்தில் நின்ற அருட்சகோதரி ஒருவரின் ஒளிப்படம் ஒன்று பிரபலமாகி வருகின்றது.

போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பொலிஸார் விரட்ட முற்பட்டபோது “அந்தக் குழந்தைகளை (போராட்டக்காரர்கள்) விட்டுவிடுங்கள். என் உயிரை எடுத்துக் கொள்ளுங்கள்” என்று முழந்தாளிட்டு அவர் பொலிஸாரை கேட்டுள்ளார்.

இவ்வாறு போராட்டகாரர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்த அருட்சகோதரியின் பெயர் ஆன் ரோஸ் நு தவங். இதுபற்றி அவர் கூறுகையில், “போராட்டக்காரர்களை நோக்கி பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். புகைக்குண்டுகளை வீசினர். பொலிஸாரைக் கண்டு போராட்டக்காரர்கள் ஓடினர். நான் அவர்களின் முன் மண்டியிட்டு அந்தக் குழந்தைகளைச் சுட்டு விடாதீர்கள். அவர்களை விட்டுவிடுங்கள் என்று கூறினேன். அவர்களுக்கு பதிலாக என்னைச் சுட்டுக் கொல்லுங்கள் என்று கூறினேன்” என்று தெரிவித்தார்.

அருட்சகோதரி ரோஸ் அவ்வாறு கூறியதும், பொலிஸார் இருவர் அவர் கைகூப்பி, “நீங்கள் இங்கிருந்து சென்றுவிடுங்கள்”, என்று மண்டியிட்டுக் கூறினர் என்று ஊடகங்கள் தெரிவித்தன. (ஐ)



### இங்கிலாந்து - இந்தியா ரி-20:

# தமிழ் வீரர்களான நடராஜன், வருண் விளையாடுவது சந்தேகம்

சென்னை, மார்ச் 11

இங்கிலாந்து - இந்திய அணிகள் மோதும் இருபது - 20 தொடரில் தமிழ் வீரர்களான நடராஜன், வருண் சக்கரவர்த்தி ஆகியோர் விளையாட மாட்டார்கள் என்று தெரிய வருகின்றது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி மூன்று வகை கிரிக்கெட் தொடரிலும் ஆடுகின்றது. முதல் நடந்த டெஸ்ட் தொடரில் 1 - 3 என்ற கணக்கில் அந்த அணி தோல்வியைத் தழுவியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையே நாளை 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் ஆரம்பமாகின்றது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது - 20 தொடரை வெல்லக் காரணமாக இருந்த தமிழ் வீரர்களான நடராஜன், வருண் சக்கரவர்த்தி ஆகியோர் இந்தத் தொடரில் ஆட மாட்டார்கள் எனத் தெரிய வருகின்றது.

காயம் காரணமாகவே இவர்கள் இந்தத் தொடரில் பங்கேற்பது கடினமாகியுள்ளது. முன்னதாக காயமடைந்திருந்த வருண் சக்கரவர்த்தி உடற்தகுதி சோதனையில் தோல்வியடைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோல, அவுஸ்திரேலிய தொடரில் தோள்பட்டையில் காயமடைந்த நடராஜன் இன்னமும் அதிலிருந்து குணமடையவில்லை என்றும் கூறப்பட்டது. (ஐ)

### ஜாம்பவான்களின் இருபது - 20

# இங்கிலாந்திடம் வீழ்ந்தது இந்தியா!



ராஜ்பூர், மார்ச் 11

கெவின் பீற்றர்சனின் அதிரடியான அரைச்சதம் கைகொடுக்க இறுதிப் பந்து வரை பரபரப்பாக நீடித்த போட்டியில் இங்கிலாந்து அணி 6 ஓட்டங்களால் இந்தியாவை வெற்றி கொண்டது.

வீதிப் பாதுகாப்பை வலியுறுத்தி உலக முன்னாள் ஜாம்பவான்கள் பங்கேற்கும் இருபது - 20 தொடர் இந்தியாவின் ராஜ்பூரில் நடக்கிறது.

இதில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில், கெவின் பீற்றர்சன் தலைமையிலான இங்கிலாந்து அணியும், சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான இந்திய அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. பில் முஸ்ராட், பீற்றர்சன் இணை தொடக்கம் கொடுத்தது. முஸ்ராட் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஆனால், பீற்றர்சன் இந்திய ஜாம்பவான்களின் பந்துகளை நாலாபுறமும் அடித்தாடினார். மறுமுனையில் விக்கெட்கள் வீழ்ந்த நிலையிலும், 37 பந்துகளை சந்தித்த பீற்றர்சன் 6 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களை விளாசி 75 ஓட்டங்களைக் குவித்தார்.

டரன் மட்டி 29, கிறிஸ் சோபீல்ட் 15, கவின் ஹமில்டன் 15 ஓட்டங்களை எடுத்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய ஜாம்பவான்களின் பந்துவீச்சில் யூசுப் பதான் 3 விக்கெட்களையும் இர்பான் பதான், முனால்ப் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு வீரேந்தர் சேவாக், சச்சின் டெண்டுல்கர் இணை தொடக்கம் கொடுத்தது. இருவரும் நிலைக்கவில்லை. சேவாக் 6, சச்சின் 9 என்று சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர்.

அடுத்து வந்த முஹமட் கைப் ஓர் ஓட்டத்துடனும், யுவராஜ் சிங் 22, யூசுப் பதான் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

13.2 ஓவர்களில் 99 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்களை இழந்து இந்திய ஜாம்பவான்கள் அணி தவித்தது. 7ஆவது வீரராக இணைந்த இர்பான் பதான் அதிரடியாக ஆடினார். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது.

பரபரப்பாக நீடித்த இந்த ஆட்டத்தில், இறுதியில் 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 182 ஓட்டங்களைப் பெற்று 6 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது இந்திய அணி.

இர்பான் பதான் 5 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 61 ஓட்டங்களையும், மன்பிரீத் கோனி 4 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 16 பந்துகளில் 35 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் மோட்டி பனசர் 3, ட்ரேட்வெல் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)



### ஐ.சி.சி. இருபது - 20 தரவரிசை:

# இந்திய அணிக்கு முதலிட வாய்ப்பு

டுபாய், மார்ச் 11

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) நேற்று இருபது - 20 தொடருக்கான தரவரிசையில் இந்திய அணி முதலிடத்திற்கு முன்னேற வாய்ப்பு கிடைத்துள்ளது.

இருபது - 20 தரவரிசையில் இந்திய அணி தற்போது இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்நிலையில், நாளை இங்கிலாந்து அணியுடன் 5 போட்டிகள் கொண்ட தொடர் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரைக் கைப்பற்றினால் இந்திய அணி முதலிடத்துக்கு முன்னேறும் வாய்ப்பு ஏற்படும்.

தற்போது முதலிடத்தில் இருக்கும் இங்கிலாந்து அணி 275 புள்ளிகளுடன் உள்ளது. இந்திய அணி 268 புள்ளிகளுடன் உள்ளது. முதலிடத்தை பிடிக்க இந்தியாவுக்கு 7 புள்ளிகள் தேவையான நிலையில், தொடரை வென்றால் இந்திய அணி இந்தப் புள்ளியை இலகுவாகப் பெற்று முதலிடத்தை பிடிக்க முடியும்.

நியூஸிலாந்து அணி அண்மையில் 3 -2 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரை வென்றது. இதனால், இரண்டாவது இடத்தில் இருந்த அந்த அணி மூன்றாவது இடத்துக்கு பின்தங்கி விட்டது.

இதேவேளை, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் தோல்வியடைந்த இலங்கை அணி 10ஆவது இடத்தில் உள்ளது. (ஐ)

### பங்களாதேஷ் - நியூஸி. தொடர்:

# வில்லியம்ஸனுக்கு ஓய்வு!

வெலிங்டன், மார்ச் 11

பங்களாதேஷூக்கு எதிரான ஒருநாள் தொடரில் நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸனுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

காயம் காரணமாகவே, எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தத் தொடரில் வில்லியம்ஸன் விளையாடமாட்டார் என்று நியூஸிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

மேலும், இந்த ஆண்டு கிரிக்கெட்டில் மிக முக்கியமான ஆண்டாகும். வரும், ஜூன் மாதம் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்துடன் நியூஸிலாந்து அணி மோதவுள்ளது. இதைத் தொடர்ந்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி ஜூலை 18ஆம் நாள் ஆரம்பமாகிறது.

இந்த போட்டி வில்லியம்ஸன் அணிக்கு அவசியம் தேவை. அவர் நாட்டுக்காக விளையாட விரும்புகிறார். ஆனாலும், அவரின் காயத்தின் நிலைமை கருதி அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஐ.பி.எல். தொடருக்கு இன்னமும் ஒரு மாதம் மட்டுமே இருக்கும் நிலையில், ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணிக்காக விளையாடி வரும் வில்லியம்ஸனின் முடிவு என்ன என்பது வெளிப்படுத்தப்படவில்லை. (ஐ)



# சுதந்திர சதுக்கத்தில் இன்று சத்தியாக்கிரகப் போராட்டம்

## ஞானசார தேரர் அதிரடி அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 11

**'இஸ்லாமிய அடிப்படைவாதத்தினாலும், கிறிஸ்தவ சபைகளின் அடிப் படைவாதத்தினாலும் பௌத்த சமூதாயத்தின் இருப்பு கேள்விக்குறியாக் கப்பட்டுள்ளது. சிங்கள. பௌத்தர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு மகாநாயக்க தேரர்களுக்கு உண்டு. ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கும், பொதுபல சேனா அமைப்பை தடை செய்ய வேண்டும் என்ற பரிந்துரைக்கும் எதிர்ப்பு தெரிவித்து இன்று வியாழக்கிழமை சுதந்திர சதுக்கத்தில் பௌத்த துறவிகளை ஒன்றி ணைத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். இதற்கு மகாநாயக்க தேரர்கள் ஆதரவு வழங்க வேண்டும்'**

மேற்கண்டவாறு பொதுபல சேனா அமைப் பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர், அஸ் கிரிய பீடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, பௌத்த நாட்டில் பௌத்த அமைப்புக்கள் அடிப்படைவாத முரண்பாடு களை தோற்றுவிக்கின்றன. என்ற தவறான நிலைப்பாட்டை ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பிலான விசாரணை அறிக்கை தோற்று வித்துள்ளது. இது தவறான செயல்பாடு என்பதை அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளோம். பௌத்த உரிமைகளை பாதுகாக்க அனைத் துத் தரப்பின ரும் ஒன்றிணைந்து செயல்படு வது அவசிய மாகும் என அஸ்கிரிய பீட அனு நாயக்கர்நாரம் பனாவே ஆனந்த தேரர், ஞானசார தேரரிடம் தெரி வித்தார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான ஜனா திபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் கண்டி - அஸ்கிரிய பீடத்தின் அனு நாயக்கர் நாரம்பனாவே ஆனந்த தேரருடன் பொதுபல சேனா அமைப் பினர் சந்திப்பு. மேற்கொண்டனர். இந்தச் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (எ)

# குழு மோதலால் குடும்பஸ்தர் பலி

## புத்தளத்தில் சம்பவம்

புத்தளம், மார்ச்.11

புத்தளம் கடையாக்குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் முள்ளிபுரத்தைச் சேர்ந்த 34 வயது மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

புறா வளர்ப்பில் ஏற்பட்ட பழைய பிரச்னையே கொலையில் முடிவடைந் துள்ளது என முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரி யவந்துள்ளது எனப் பொலி ஸார் குறிப்பிட்டனர். (எ)

# ஆயுதங்கள், வாள்கள் இறக்குமதி விசாரணை செய்ய அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச்.11

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் ஆயுதங்கள் மற்றும் வாள்கள் தொடர்பில் விசாரணை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவிற்கமைய பொலிஸ் மா அதிபருக்கு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், சந்தேக நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ)

# நுண்கடன் திட்ட நெருக்கடி 200 பெண்கள் தற்கொலை! 28 இலட்சம் பேர் பாதிப்பு

## ஹரினி பாலசூரிய அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, மார்ச்.11

நுண்கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் தற்கொலை செய்துகொண்டனர் எனவும் 28 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பாராளுமன்ற உறுப் பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

நாட்டின் பொருளாதார முறையால் பெண் தொழில் முயற்சியாளர் களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். நிதி நிறுவனங்களால் பெண்கள் பெருமளவில் சூரையாடப்பட்டு வருகின்றனர். குறிப்பாக நுண்கடன் நிதி நிறுவனங்களின் போலி வாக்குறுதிகளுக்கு ஏமாற்றப்பட்டு, பெற்றுக் கொண்ட கடனைச் செலுத்தமுடியாத பலர் எமது நாட்டில் உள்ளனர்.

மேலும், நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்களின் பெரும் சூறையாடல்கள் காரணமாக எமது நாட்டில் 28 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 24 இலட்சத்து 38 ஆயிரம் பேர் பெண்கள். அதேபோன்று நுண்கடன்திட்டத்தில்பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு கடன் நிவாரணங்களை வழங்குவதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டபோதும் அந்த நிவாரணங்கள் இது வரை எந்தப் பெண்களுக்கும் கிடைக்கவில்லை- என்றார். (எ)

# மாகாண ஆட்சி முறைக்கு இந்தியா முயற்சி செய்யும்

### முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் நம்பிக்கை

அம்பாறை, மார்ச்.11

மாகாண ஆட்சி முறையைக் கொண்டு வருவதற்கு இந்தியா வுக்கு கடமை இருக்கிறது. அதனை அந்நாடு செய்யும் என எதிர்பார்க்கின்றோம் என மட் டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித் தம்பி யோகேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

அம்பாறை மாவட்டம்- பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்று வருகின்ற சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில், நேற்று முன் தினம் மாலை யோகேஸ்வர னும் கலந்து கொண்டார்.

இதன்போது, ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

மாகாண ஆட்சி முறைமை தேவையில்லை என சில கட்டத் தில் மத்தியில் ஆட்சியில் உள் ளவர்கள் சிந்திக்கின்றார்கள். மத்திய அரசின் ஆட்சி முறைமை மட்டும் இருக்கட் டும். பிரதேச சபை, மாநகர சபை, நகர சபையை பலப்ப டுத்தி விடுவோம் என நினைக் கின்றார்கள்.

மாகாண சபை முறைமை சர்வதேச ரீதியாக தீர்க்கப்பட்ட விடயம். இது தனி ஒரு நாட் டின் ஒப்பந்தம் அல்ல, சர்வதேச ஒப்பந்தமாகும். இந்தியாவும் இலங்கையும் செய்துகொண் டதுதான் இந்த ஒப்பந்தம்.

இந்த மாகாண ஆட்சி முறை யைக் கொண்டு வருவதற்கு இந்தியாவுக்கு கடமை இருக் கிறது. மாகாண ஆட்சி முறை மையை கொண்டு வருவதோடு மாத்திரமல்லாது காணி அதி காரம், நிதி அதிகாரம், பொலிஸ் அதிகாரங்களை பெற்றுக் கொடுக்க வேண்டியது இந்தி யாவின் கடமை.

அதனை இந்தியா செய்யும் என எதிர்பார்க்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல்: குற்றவியல் விடயங்கள் சட்டமா அதிபரால்தான் தீர்மானிக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறுதினதாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசா ரணை ஆணைக்குழுவின் அறிக்கை யில் சட்ட ரீதியானதும், அரசியல் - சமூக ரீதியானதுமான இரு வகை பரிந்துரைகள் முன் வைக் கப்பட்டுள்ளன. அதற்கமைய குற்றவியல் வழக்கு தொடர்வது தொடர்பில் சட்டமா அதி பரால் மாத்திரமே தீர்மானம் எடுக்கப் படும். இவ்விடயங்களில் வேறு தரப்பினரின் தலையீடுகள் காணப் படாது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரி வித்தார்.

குறித்த அறிக்கையில் முன்வைக் கப்பட்டுள்ள ஏனைய பரிந்துரை களில் நடைமுறை சாத்தியமான முறையில் அமுல்படுத்தப்படக் கூடியவை தொடர்பில் அமைச் சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்ச ரவை உப குழுவின் அறிக்கை வெகுவிரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலங்கையில் எந்தவொரு பிர ஜைக்கு எதிராகவும் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்வதா?, இல் லையா? என்பது தொடர்பிலும் சட்டமா அதிபரால் மாத்திரமே தீர்மானிக்க முடியும். எனினும் வெவ்வேறு நிறுவனங்களை அமைத்தல், தற்போது காணப் படும் சட்டங்களை மறுசீர மைத்தல், கொள்கை ரீதியான விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பரிந் துரைகள் முன்வைக்கப்பட்டுள் ளன. இவ்வாறு முன்வைக்கப்பட் டுள்ள பரிந்துரைகளை நடை முறை சாத்தியமான முறையில் அமுல்படுத்த முடியுமா?, அமுல் படுத்த முடியுமெனில் எவ்வாறு அமுல்படுத்துவது என்பதற்கான அறிக்கையை சமர்ப்பிப்பதற் காகவே அமைச்சர் சமல் ராஜ பக்ஷ தலைமையில் 6பேர் அடங் கிய அமைச்சரவை உபகுழு நிய மிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை வெகு விரைவில் ஜனா திபதியிடம் கையளிக்கப்படும். இந்த குழுவில் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பான விடயங் கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. ஏனைய விடயங்கள் பற்றியே அவதானம் செலுத்தப் படும்- என்றார். (எ)


# பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் இலத்திரனியல்சார் இயந்திரவியல் தொழில்நுட்ப சேவையினை வழங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு

**தொழிநுட்பவியலாளர்கள் (ஆண்கள்),**
**கணனி தரவேற்றுநர் (பெண்)**
வயதெல்லை 18-25 வேண்டப்படுகின்றனர்.

**தொழில்நுட்பவியலாளர்கள்:**
இலத்திரனியல். இயந்திரவியல் துறையில் ஆர்வமும் விரைவான செயற் திறனும் நேர்மையும் கடமையுணர்வும் நற்பண்புகளும் இருத்தல் வேண்டும். முன்னனுபவம் தேவையில்லை.

**கணனி தரவேற்றுநர் :**
கணனி சார் அறிவும், தமிழ், ஆங்கிலம் தட்டச்சு வேலை தெரிந்திருத்தலும் விரும்பத்தக்கது. அத்துடன் நேர்மையும், கடமையுணர்வும் நற்பண்புகளும் இருத்தல் வேண்டும்.

**தொடர்புகளுக்கு : 077 361 1041**

# இதுவும் நடந்தது!

பிரான்ஸில் மனித உரிமை மையத்தின் பணிப்பாளராக இருந்து கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களின் மனித உரிமைக் காக குரல்கொடுத்து வருபவர் ச.வி. கிருபாகரன்.

விடுதலைப் புலிகள் போராடிக்கொண்டிருந்த காலத்திலிருந்தே தனி ஒருவனாக ஜெனிவா மனித உரிமை பேரவைக்கு சென்று இலங்கை அரசின் மனித உரிமைகள் மீறல்களை வெளிச்சம் போட்டுக்காட்டுவதில் தனது முழு நேரத்தையும் செலவிட்டவர். One man Army போல அவர் செயல்பட்டவர். அவரது செயல்பாடுகள் அனைத்திலும் இந்த ஊர்க்குருவிக்கு உடன்பாடு இருந்ததில்லை. உண்மையான மனித உரிமைவாதி என்றால் அரசின் அல்லது படைகளின் மனித உரிமைகள் மீறல்களை மாத்திரம் வெளிப்படுத்துவதில்லை. விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து மனித உரிமை மீறப்படும் போதும் அவர் குரல் கொடுத்திருக்க வேண்டும்.

இப்போது அது விடயமல்ல. அவரது பேட்டி ஒன்றை நேற்றைய தினம் காணமுடிந்தது. அதில் அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் நமது அரசியல் தலைவர்களால் உடனடியாக கவனிக்கப்படவேண்டியவை.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் கடந்த வாரம் இந்தியப் பிரதிநிதியின் உரை குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கிருபாகரன், அதனைக் கவனிக்க நமது தலைவர்கள் தவறிவிட்டனர் என்று ஆதங்கப்படுகிறார்.

ஜெனிவாவில் பிரிட்டன் தலைமையிலான நாடுகள் எந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தாலும், அதனை இந்தியா என்ன செய்கின்றது என்று பார்த்தே மற்றும் சில நாடுகள் அதனை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்று முடிவெடுக்கும் என்ற அவரது அனுமானம் பத்தோடு பதினொன்றாக ஒதுக்கிவிடக்கூடியதல்ல. ஆக, இந்தியா இந்தத் தடவை சர்வதேச சமூகத்திற்கு ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லியிருக்கின்றது. இலங்கையில் நீடித்த அமைதி நிலவ பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்பதை இந்தியா அழுத்திச் சொல்லியிருக்கின்றது.

அதனை நம்மவர்கள் பற்றிப் பிடிக்காமல், சர்வதேச நீதிமன்ற விசாரணையை இறுகப்பிடித்திருக்கின்றனர். இது சாத்தியமல்ல என்பதை பிரிட்டன் தெளிவாக சொன்ன பின்னரும் நம்மவர்கள் கேட்பதாக இல்லை.

தீர்மானத்தில் இந்தியா குறிப்பிட்ட பதின்மூன்றை உள்ளடக்கியிருந்தால்கூட இலங்கை அதனை நிறைவேற்றப்போவதில்லை. அவ்வாறு நிறைவேற்ற மறுக்கின்றபோது அதனையே இந்தியா தலைமையில் ஜெனிவாவில் நாம் தூக்கிப் பிடித்திருக்கமுடியும். தமது அரசமைப்பில் உள்ளதையே ஏற்றுக்கொள்ளாத அரசாங்கத்தை மனித உரிமை விடயத்தில் எதிர்பார்க்கமுடியுமா என்று கேள்வி கேட்க நம்மால் முடியும்.

நமது அரசியல் தலைமைகள் இதற்காக இன்னமும் இந்தியாவின் கதவுகளைத் தட்டவில்லை. சுரேஷ்பிரேமச்சந்திரன் மாத்திரம் அவ்வவ்போது அறிக்கைகள் விடுக்கிறார். அதோடு அவரது பணியும் முடிந்துவிடுகின்றது.

பதின்மூன்றாவது திருத்தத்தில் மாகாணங்களுக்கு காணி அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்று இரவோடிரவாக வடக்கின் காணி பதிவேடுகள் அநுராதபுரத்திற்கு மாற்றப்படுகின்றன. நாம் இப்போது அவசரமாக செய்யவேண்டியது என்ன என்பதை நமது தலைவர்கள் தீர்மானிக்கவேண்டிய கட்டம் இது.

இன்னமும் காலம் கடந்துவிடவில்லை என்கிறார் கிருபாகரன். எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்தியத்தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவிருக்கிறார் என அறியமுடிகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தை நமது தலைவர்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

கிருபாகரன் தனது பேட்டியில் சொன்ன ஒரு கருத்து இங்கே குறிப்பிடப்படவேண்டியது.

'தான் இவ்வாறு இந்தியா குறித்து சொல்வதால் தன்னை 'றோ'வின் ஆள் என்று நம்மவர்கள் கூறுவார்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். அப்படி யாராவது கூறுவார்கள் என்றால் அவ்வாறு கூறுபவர்கள் ராஜபக்‌ஷக்களின் நிகழ்ச்சி நிரலில் வேலை செய்பவர்களாகவே இருக்கமுடியும்.'

- ஊர்க்குருவி.

# இலங்கை விடயத்தில் கடந்தகால தவறுகளை சரிசெய்ய ஐ.நாவுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது

## மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் சுட்டிக்காட்டு

ஜெனிவா, மார்ச் 11

**உலகெங்கும் போரினாலும், இனப்படுகொலைகளினாலும் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியினை பெற்றுக் கொள்வதில், ஐ.நாவின் தேவை தற்போது கேள்விக்குறியாகியுள்ள நிலையில், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதன் மூலம், தனது கடந்த கால தவறுகளை சரிசெய்வதற்கு ஐ.நாவுக்கு தற்போது ஓர் வாய்ப்பு கிட்டியுள்ளது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

இதன் மூலம் ஐ.நா. மனித உரிமைச் சபை தனது தலைமைத்துவத்துக்கும், முன்னேற்றத்துக்கும் வாய்ப்பாக இது அமையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு தொடர்பில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை ஐ.நா. அங்கத்துவ நாடுகளுக்கு அனைத்துலக தொடர்பாடலுக்கான அமைச்சர் மாணிக்கவாசகர் காணொலி வாயிலாக முன்வைத்திருந்தார்.

அவர் தனதுரையில், "கடந்த 12 ஆண்டுகளாக நாங்கள் இன்னமும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காகக் காத்திருக்கிறோம். ஐ.நா. தீர்மானங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் தொடர்ந்து இணங்காது, மற்றும் போர்க்குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் உட்பட இடைக்கால நீதி வழிமுறைகளை நிறுவுவதில் தாமதம் என்பன போரில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு உண்மை மற்றும் நீதியை வழங்குவதைத் தவிர்ப்பதற்கான ஒரு முயற்சியாகும்.

எந்தவொரு தீர்மானத்தையும் நடைமுறைப்படுத்தி நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான சூழலை உருவாக்கும் நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தை உள்நாட்டு பொறிமுறை மூலம் செய்யமுடியாது என்பதை இலங்கை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்ததன் மூலம் தெளிவாகிவிட்டது.

உங்களது தற்போதைய தீர்மான வரைவு, பாதிக்கப்பட்டவர்களை மேலும் துன்பத்திற்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்குவதோடு, இலங்கை இனவாத அரசுக்கும் அதன் குற்றவாளிகளுக்கும் மேலதிக நேரமும் வெகுமதியும் அளிப்பதாக அமைகிறது. உலகெங்கும் போரினால் பாதிக்கப்பட்டவர்கள், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு உட்படுத்தப்படுவதால் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைப்பேரவையின் தேவை இப்போது கேள்விக்குறியாகியுள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதின் மூலம், தனது தலைமைத்துவத்தைக் காண்பிப்பதற்கும், கடந்த கால தவறுகளை சரிசெய்வதற்கும், முன்னேறுவதற்கும் ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என உறுதிபடத் தெரிவிக்கின்றோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# விமலுக்கு எதிராக ரிஷாத் சி.ஐ.டியில் முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரானையும் தன்னையும் தொடர்புபடுத்தி, அமைச்சர் விமல் வீரவன்ஸ வேண்டுமென்றே தெரிவித்த பொய்யான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடொன்றை செய்துள்ளதாகவும், இது தொடர்பில் அவரை விசாரணை செய்து, உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு சி.ஐ.டியினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

விமலுக்கு எதிராக சி.ஐ.டியினரிடம் முறைப்பாடொன்றை கையளித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கூறியவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றதிலிருந்து, விமல் வீரவன்ஸ என்னைப் பற்றி மிகவும் மோசமான, பொய்யான குற்றச்சாட்டுக்களை கட்டவிழ்த்து வருகின்றார். பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும், சி.ஐ.டி யினரின் விசாரணைகளிலும் என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே பொய்யென நிரூபிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அண்மையில் வெளிவந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும், எனக்கும் இந்த தாக்குதல் சம்பவத்துக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் என்னைப் பற்றி விமல் வீரவன்ஸ பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்தார். அத்துடன், என் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத பட்சத்தில், தான் அரசியலில் இருந்து வெளியேறுவதாகவும் சூளுரைத்தார். எனவே, அவர் இந்தச் சந்தர்ப்பத்தில், அரசியலில் இருந்து வெளியேறி, தான் கூறியதை செயலில் காட்டவேண்டும். தவிர நேற்றுமுன்தினம் மாலை மீண்டும் ஒரு பெரிய பொய்யை கூறியுள்ளார். எனவேதான் அதற்கெதிராக முறைப்பாடு செய்துள்ளேன். அதுமாத்திரமின்றி, எனது சட்டத்தரணி ஊடாக விமலுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தயாராகி வருகின்றேன்-என்றார்.

# பொலிஸ் சேவையில் இணைய வடக்கு இளைஞர்க்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு மாகாணத்தின் இளைஞர், யுவதிகள் இலங்கை பொலிஸ் சேவையில் இணைவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்று வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன அறிவித்துள்ளார்.

2021 பெப்ரவரி 12ஆம் திகதி வெளியான வர்த்தமானியின் பிரகாரம், பொலிஸ் கொஸ்தாபிள், பெண் பொலிஸ் கொஸ்தாபிள் மற்றும் பொலிஸ் கொஸ்தாபிள் சாரதி போன்ற பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 18 - 25 வயதுக்கு உட்பட்ட, ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 4 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும், நேர்முகப் பரீட்சைகள் வடக்கு மாகாணத்திலேயே இடம்பெறும் என்றும் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றிய மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 2021. 02. 12ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

கல்வி tv
CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

ஈழநாடு
Eelanadu

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## சந்தேகநபர்கள் ஐந்து பேர் குறித்து விசாரணை நடத்துமாறு உத்தரவு!!

கொழும்பு, மார்ச் 11.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையினூடாக வெளிக் கொணரப்பட்ட சந்தேகநபர்கள் ஐவர் தொடர்பில் விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அபு ஹின்த், லுக்மன் தாலிப், அபு அப்துல்லா, ரிம்சான், சாரா ஜஸ்மின் ஆகியோர் தொடர்பில் விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் இணைப்பதிகாரி சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, ஏப்ரல் 21 தாக்குதல் இடம்பெற்ற காலப் பகுதிக்கு முன்னரும் அதற்கு பின்னரும் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட வாள்கள் மற்றும் அதனை ஒத்த ஆயுதங்களை தமது பொறுப்பின் கீழ் கொண்டு வருமாறு சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் மேல் நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டதையடுத்து சட்ட மா அதிபரால் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பெருமளவில் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ள ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்ட மற்றும் களஞ்சியப் படுத்தப்பட்ட இடங்களையும் அவை விநியோகிக்கப்பட்ட இடங்களையும் கண்டறியுமாறும் சட்டமா அதிபரால் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய குழுவினர், ஆயுத கொள்வனவுடன் தொடர்புடைய நபர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறும் சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பிலான அறிக்கையை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் இணைப்பதிகாரி சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை ஆயர்கள் பேரவை ஏற்றது!

### பரிந்துரைகளை அப்படியே அமுல்படுத்தவும் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 11

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக கத்தோலிக்க ஆயர்கள் பேரவை அறிவித்துள்ளது.**

இந்தத் தாக்குதலுக்கு நேரடி பொறுப்புக் கூற வேண்டியவர்கள், உதவி - ஒத்தாசைகள் புரிந்தவர்கள் மற்றும் பொறுப்புக்களை தவற விட்டவர்கள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டமா அதிபருக்கு அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் வழங்குமாறும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே, முடக்கப்பட்டுள்ள 22 உணர்திறனுடைய ஆவணங்களையும் சட்டமா அதிபரிடம் கையளிக்குமாறும் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை அப்படியே நடைமுறைப்படுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி - கர்தினால் சந்திப்பு இறுதிநேரத்தில் இரத்தானது!

### பாதிக்கப்பட்டோரை அழைத்தமையே காரணமாம்!

கொழும்பு, மார்ச் 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இடையே நேற்று நடக்கவிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது.

பேராயரின் இல்லத்தில் இடம் பெறவிருந்த இந்த சந்திப்பில் ஆயர்களே சந்திப்பர் என்று ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதற்கு மாறாக நீர்கொழும்பு - கடுவாப்பிட்டி, கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயங்களில் ஈஸ்டர் தாக்குதல் சமயத்தில் உயிரிழந்தவர்களையும் உறவினர்களையும் கர்தினால் அழைத்திருந்தார். இந்த நிகழ்வு முன்னரே திட்டமிடப்படாதமையால் அதில் பங்கேற்க ஜனாதிபதி மறுத்து விட்டார் என்று கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

இதேசமயம், பேராயரை தொலைபேசி மூலம் அழைத்த ஜனாதிபதி அந்த சந்திப்பை ஜனாதிபதி செயலகத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார் என்று கூறப்படுகின்றது. ஆனால், ஜனாதிபதியின் இந்த யோசனைக்கு உடன்பட பேராயர் மறுத்துவிட்டார். இதனால், ஜனாதிபதி - பேராயர் இடையேயான பேச்சு இரத்தானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## "ஆணைக்குழுவால் நீதித்துறையின் சுதந்திரம் பாதிப்பு"

கொழும்பு, மார்ச் 11

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் மூலம் பொது மக்கள் பிரதிநிதிகளை மௌனமாக்க முயற்சித்து, தற்போதைய அரசாங்கம் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரா சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் குடியுரிமைகளை பறிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. முன்னாள் அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் அவர்கள் ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டனர். அரசியல் பழிவாங்கலில் ஈடுபடவில்லை. அந்த நேரத்தில் குற்றச்சாட்டுகள் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டன. இருப்பினும், இன்று ஓர் ஆணைக்குழு மூலம் வழக்குகளை தள்ளுபடி செய்வதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இது ஜனநாயகம் உள்ளிட்ட நீதித்துறையின் சுதந்திரத்தை சீர்குலைக்கிறது - என்றார்.

## வாக்குமூலம் அளிக்க வேலன் சுவாமி மறுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

முற்கூட்டியே அறிவிக்காமையால் வாக்குமூலம் பெறுவதற்காக பொலிசார் சென்றிருந்தபோது அதனைக் காரணம் காட்டி வாக்குமூலம் அளிப்பதற்கு வேலன் சுவாமிகள் மறுத்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையில் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பில் தவத்திரு வேலன் சுவாமிகளிடம் வாக்குமூலம் பெறுவதற்காகக் கிளிநொச்சி பொலிஸார் நேற்று அவரின் சிவகுரு ஆதினத்திற்கு சென்றிருந்தனர்.

எனினும், முற்கூட்டியே அறிவிக்காமையால் வாக்குமூலம் வழங்க முடியாது என்று அவர் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

இலங்கை அரசாங்கம் இவ்வாறு பல்வேறு மட்டங்களில் வாக்குமூலங்களை பதிவு செய்து வருகின்றது என்றும் இதன்போது வேலன் சுவாமிகள் கூறினார்.

சட்டத்தை மதிக்கும் அதேவேளை, வாக்குமூலம் போன்ற தொடர்ச்சியான உள ரீதியான பாதிப்புகள் ஏற்படுத்தப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன் - என்றும் சொன்னார்.




## சிங்காரவேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதான மஹாசிவராத்திரி பெருவிழா உற்சவம்

நல்லூர் வீரமாகாளி அம்பாள் ஆலய வளாகத்தின் ஈசான பாகத்தில் அமைந் துள்ள சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சந்நிதானத்தில் நாளை மறுதினம் மஹாசிவராத்திரி பெருவிழா மிகசிறப்பாக நடைபெறவுள்ளது. வியாழக் கிழமை மாலை ஆறு மணிக்கு பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி தொடர்ந்து விஷேட திரவ்ய ஹோம வழிபாடுகள் நான்கு சாமமும் நடைபெறும். மாலை ஆறு மணி தொடக்கம் அதிகாலை ஐந்து மணிவரை அடியவர்கள் தமது கரத்தினால் மூலாலயத்தில் வீற்றிருக்கும் பிரமாண்டமான லிங்கேஷ்வர பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்து நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்து கொள்ளமுடியும். பால் அடியவர்களே கொண்டு வருதல் வேண்டும். நெய்தீபம் ஆலயத்தில் வழங்கப்படும்.

நிர்வாகம்.






# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : நலம்தானா - மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - கிறாக்




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்




7.30 மணி : பல்துறைக் கருவூலம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு - இசை நிகழ்ச்சி



10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

**ஐ ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் வடலியடைப்பு சித்திவிநாயகர் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளி அம்பாள் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : மகா சிவராத்திரி பூஜை 2021 நேரலை மறுநாள் காலை 5.30 மணிவரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித வேளாங்கன்னி மாதா மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.